Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 291

ஞாயிற்றுக்கிழமை
14 செப்ரெம்பர் 2025

ஆவணி 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

## சொகுசுக்காரை ஒப்படைத்தார் ஆர்.பிரேமதாஸவின் மனைவி ஹேமா

கொழும்பு, செப். 14
முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் மனைவி ஹேமா பிரேமதாஸவுக்கு அரசாங்கம் வழங்கியிருந்த சொகுசுக் கார் மீளவும் அரசாங்கத்திடமே ஒப்படைக்கப்

14

இலங்கையில்

# போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லை!

## தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, செப்ரெம்பர் 14**
**இலங்கையில் போர்க்குற்றங்கள் எவையும் இடம்பெறவில்லை. மாறாக போரில் நிகழக்கூடாத விடயங்கள் இடம்பெற்றிருக்கலாம் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.**

14



இலங்கையில் மீண்டும்

## போர் ஏற்படாது என உத்தரவாதம் இல்லை!

மஹிந்த தெரிவிப்பு



கொழும்பு, செப். 14
இலங்கையில் மீண்டும் போர் ஏற்படாது என்று உறுதியாகக் கூறிவிடமுடியாது. ஏனெனில் புலிகள் போருக்கு தயாராவார்கள் என்பதை நாம் எவரும் நினைத்துப் பார்க்கவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி

14

## சுதந்திரப் பலஸ்தீனம்; ஆதரித்தது இலங்கை!

வொஷிங்டன், செப். 14
இஸ்ரேல், பலஸ்தீனம் ஆகிய இரு நாடுகளையும் அங்கீகரிக்கும் வகையில், ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை ஆதரவாக வாக்களித்துள்ளது.
ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டம் தற்போது இடம்பெற்றுவருகின்றது. நேற்றைய அமர்வின்போது, காஸாவில் இடம்பெறும் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில், 'பலஸ்தீனத்தையும், இஸ்ரேலையும் இரு சுதந்திர நாடுகளாக அங்கீகரிப்பது' என்ற தீர்மானத்தை பிரான்ஸ் முன்வைத்தது.

14

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும் நடவடிக்கைகள் நிறைவு

நீதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 14
பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும் நடவடிக்கைகள் கிட்டத்தட்ட நிறைவடைந்துள்ளன. இது தொடர்பான சட்டவரைவு அடுத்தவாரம் இறுதிப்படுத்தப்படும் என்று நீதியைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.
இது தொடர்பில்

14

## நாட்டை நவீனப்படுத்தவே பட்ஜெட்டில் முன்னுரிமை!

ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

விரிவு பக்கம்:- 07



இணையக் குற்றக்குழுவால்

## மியான்மரில் இலங்கையர்கள் சிறைப்பிடிப்பு

கொழும்பு, செப். 14
மியான்மரின் மியாவாடி பகுதியில் உள்ள இணையக் குற்ற முகாம்களில் 13 இலங்கையர்கள் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்

14

## எம்.பி.க்களின் ஓய்வூதியம் மிகவிரைவில் நீக்கப்படும்!

அமைச்சர் நளிந்த தெரிவிப்பு



கொழும்பு, செப். 14
ஜனாதிபதிகளுக்குரிய சிறப்புரிமைகளை நீக்குவதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அடுத்தகட்டமாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் நீக்கப்படும் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

14

கதிரியக்கத்துறை

## மருத்துவர்கள் இன்மையால் போதனாவில் இடர்பாடுகள்!

விரிவு பக்கம்:- 03

**முச்சந்தி முரளி**

'பாவியர் போன
இடமெல்லாம் பள்ளமும்
திட்டியும்
எண்டமாதிரித்தான்
மியான்மரிலையும்
நடந்திருக்கு கண்டியளோ'

## சுற்றுலாவிகளின் வருகை இலங்கையில் அதிகரிப்பு

கொழும்பு, செப். 14
இலங்கைக்கு சுற்றுலாவிகளின் வருகை தொடர்ச்சியாக அதிகரித்துவருகின்றது என்று இலங்கையின் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் அந்தச் சபை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
இலங்கைக்கு வரும் சுற்றுலாவிகளின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து

14

சஞ்சீவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி: 13.09.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 4193
ஆங்கில எழுத்து: K
வெற்றி இலக்கங்கள்: 20 25 51 78
விசேட எழுத்து: K

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி: 13.09.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1260
வெற்றி இலக்கினம்: விருட்சிகம்
வெற்றி இலக்கங்கள்: 20 21 31 60

**NLB ஜய**
திகதி: 13.09.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0219
ஆங்கில எழுத்து: L
வெற்றி இலக்கங்கள்: 2 4 7 8

**மெகா பவர்**
திகதி: 13.09.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 2299
ஆங்கில எழுத்து: R
சுப்பர் இலக்கம்: 04
வெற்றி இலக்கங்கள்: 11 16 34 39

**மஹஜன சம்பத**
திகதி: 13.09.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 5951
ஆங்கில எழுத்து: U
வெற்றி இலக்கங்கள்: 3 7 9 4 2 3

**தன நிதானய**
திகதி: 13.09.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1981
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கங்கள்: 15 54 55 56
விசேட எழுத்து: E

**சுப தவசக்**
திகதி: 13.09.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0067
வெற்றி இலக்கினம்: துலாம்
வெற்றி இலக்கங்கள்: 07 12 20 24

# சாதக பதில் கிடைக்காவிடின் செப்.17 இல் சுகவீன விடுப்பு

## இலங்கை மின்சாரசபைத் தொழிற்சங்கங்கள் அறிவிப்பு

கொழும்பு, செப்.14

**இலங்கை மின்சாரசபையைத் தன்னிச்சையாக மறுசீரமைக்கும் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிற்சங்கங்கள் மேற்கொண்டு வரும் சட்டப்படி வேலைசெய்யும் போராட்டத்துக்கு எதிர்வரும் 16ஆம் திகதிக்குள் சாதகமான பதில் கிடைக்காவிட்டால், செப்ரெம்பர் 17 அன்று அனைத்து ஊழியர்களும் மருத்துவ விடுப்பு எடுப்பர் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

இதுதொடர்பில் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் அதிகாரிகள் சங்கத்தின் துணைத் தலைவர் நந்தன உதயகுமார தெரிவிக்கையில்,

எமது கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுத்தரும்படி தெரிவித்து, நாங்கள் சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தை ஆரம்பித்தோம். ஆனால் எமது போராட்டம் தொடர்பில் அரசாங்கத் தரப்பில் இருந்து இதுவரை சாதகமான பதிலும் கிடைக்கவில்லை. ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கம் வெளிப்படையான முறையில் செயற்படவேண்டும். தொழிற்சங்கங்களுடன் கலந்தாலோசித்து சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். எங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தயங்கமாட்டோம்- என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி: 13.09.2025
தினம்: சனிக்கிழமை
வெற்றி வாரம்: 0659
ஆங்கில எழுத்து: H
வெற்றி இலக்கம்: 4 6 0 3 3 2

**Super Ball**
திகதி: 13.09.2025
தினம்: சனிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 2925
ஆங்கில எழுத்து: I
வெற்றி இலக்கம்: 24 29 35 56

**சனிதா**
திகதி: 13.09.2025
தினம்: சனிக்கிழமை
ஆங்கில எழுத்து: Q
வெற்றி இலக்கம்: 11 22 53 61
வெற்றி வாரம்: 5086

**SASIRI**
திகதி: 13.09.2025
தினம்: சனிக்கிழமை
வெற்றி வாரம்: 0769
வெற்றி இலக்கம்: 02 37 48

**லக்ன ராசி**
திகதி: 13.09.2025
தினம்: சனிக்கிழமை
மேஷம்
வெற்றி இலக்கம்: 02 18 41 52
சீட்டிழுப்பு வாரம்: 4637

**KAPRUKA**
திகதி: 13.09.2025
தினம்: சனிக்கிழமை
ஆங்கில எழுத்து: S
சுப்பர் இலக்கம்: 20
வெற்றி இலக்கம்: 04 07 54 62
வெற்றி வாரம்: 2001

**அத கோடிபதி**
திகதி: 13.09.2025
தினம்: சனிக்கிழமை
ஆங்கில எழுத்து: U
வெற்றி இலக்கம்: 08 10 27 73
வெற்றி வாரம்: 2751



# வடக்கை முன்னேற்றியது மஹிந்த ராஜபக்சவே!

## பெரமுன தெரிவிப்பு

கொழும்பு.செப்.14

மஹிந்த அரசால் தான் வடக்கு மாகாணம் முன்னேற்றம் கண்டது. போரை முடிவுக்குக் கொண்டுவந்தமை தொடர்பில் சிலர் மாறுபட்ட கருத்துடன் இருக்கலாம். ஆனால் வடக்கு மக்களால் கோரப்பட்ட அமைதியான அரசியல் சூழ்நிலையை மஹிந்த ராஜபக்சவே ஏற்படுத்திக் கொடுத்தார். இதனை வடக்கு மக்கள் மறக்கவில்லை.

இவ்வாறு பொதுஜன பெரமுனக்கட்சியின் ஊடகப்பேச்சாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரிவினைவாத சிந்தனையில் உள்ள சிலர் இருக்கலாம். அவர்களே மஹிந்தவின் வெளியேற்றத்தைக் கொண்டாடுகின்றனர். அவர்களைத் திருப்திப்படுத்தும் விதத்திலேயே இந்த அரசாங்கம் செயற்படுகின்றது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து தமது உயிரைப் பாதுகாத்துக்கொள்வதற்காக அரசாங்கம் பக்கம் வந்த 3 இலட்சம் பேர் பாதுக்காக்கப்பட்டனர். அவர்களுக்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. வடக்கில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டன, காணிகள் விடுவிக்கப்பட்டன. வீடுகள் அமைக்கப்பட்டு, மீள்குடியேற்றமும் செய்யப்பட்டது. சரணடைந்த முன்னாள் போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டனர். மஹிந்த அரசால்தான் வடக்கு முன்னேற்றம் கண்டது-என்றார். (க-44)

# எல்ல பஸ் விபத்து; மேலுமொருவர் சாவு

கொழும்பு.செப்.14

எல்ல-வெல்லவாய பிரதான வீதியில் இடம்பெற்ற கோர பஸ் விபத்தில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 4ஆம் திகதி இரவு எல்ல - வெல்லவாய பிரதான வீதியில் 24 ஆவது மைல்கல் அருகில், பள்ளத்தாக்கில் கவிழ்ந்து இந்த விபத்துச் சம்பவித்தது.

விபத்தில் பஸ்ஸின் சாரதி உள்ளிட்ட 15 பேர் உயிரிழந்திருந்தனர். விபத்தில் காயமடைந்த மேலும் 17 பேர் சிகிச்சைபெற்றுவந்தநிலையில் தங்காலை மாநகரசபையின் பணியாளரான பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் சிகிச்சையின்போது உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# வெப்பநிலை உயர்வு

மன்னார், செப்.14

நாட்டில் 12 மாவட்டங்களுக்கு மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை அதிகரித்துக் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.


இதன்படி, வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளிலும், மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மனித உடலில் உணரப்படும் வெப்பநிலை அதிகரித்துக் காணப்படும். வெப்பத்திலிருந்து பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை எச்சரித்துள்ளது. (க-இ)

# நாட்டை முன்னேற்றாது பழிவாங்கும் அரசாங்கம்

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

கொழும்பு.செப்.14

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதாகக் கூறி ஆட்சியைப் பொறுப்பேற்ற அரசாங்கம், அரசியல் பழிவாங்கல்களைத்தவிர வேறு ஒன்றையும் செய்யவில்லை என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.



அரசாங்கம் அபிவிருத்திகளையோ, சமூக மேம்பாட்டையோ செய்யவில்லை. பொருளாதார வளர்ச்சி வேகம் 3 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. கடன் சுமை முன்னரைவிட, தற்போது அதிகரித்துள்ளது. நாட்டில் ஜனாதிபதி என்பவர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தீர்மானம் எடுப்பவராவார். எனவே அவர் ஓய்வுபெற்ற பின்னர், அவரது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டியதும், ஏனைய சிறப்புரிமைகள் வழங்கப்படவேண்டியதும் அத்தியாவசியமானதாகும். தற்போது முன்னாள் ஜனாதிபதிகள் உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து வெளியேறியுள்ளனர். இதன்மூலம் எவ்வாறு பணத்தை மீதப்படுத்துகின்றனர் என்பதையும் நாட்டுக்கு வெளிப்படுத்தவேண்டும்- என்றார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதிக்கொடை




யாழ்ப்பாணம், செப்.14

வடபிராந்திய ஸ்ரீ சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின் ஏற்பாட்டில் வருடாந்தக்குருதிக்கொடை முகாம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் நண்பகல் 12 மணிவரை திருநெல்வேலியில் அமைந்துள்ள சத்தியசாயி சேவா நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்தக் குருதிக்கொடை முகாமில் குருதிக் கொடையாளர்கள் கலந்துகொண்டு உதிரக் கொடை வழங்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)

# கதிரியக்கப்பிரிவு மருத்துவர்கள் யாழ்.போதனாவில் பற்றாக்குறை

கொழும்பு, செப்.14

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கதிரியக்கப் பிரிவில் மருத்துவர்கள் பற்றாக்குறை கள் நிலவுவதனால் பல சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக நோயாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.



கதிரியக்கப் பிரிவில் பணியாற்றி வந்த மருத்துவர்கள், பதவி உயர்வுகள், இடமாற்றல் என வெளியேறியமையால் இந்தப் பற்றாக்குறை நிலவுகிறது.

நோயாளர்கள் எக்ஸ்ரே, அல்ட்ரா சவுண்ட் ஸ்கானர், எம்.ஆர்.ஐ உள்ளிட்டவற்றை எடுப்பதற்கு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அவற்றை யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் எடுப்பதற்கு நீண்டகாலம் காத்திருக்கவேண்டிய நிலைமைகள் காணப்படுவதால், அதற்குள் நோயின் தீவிரம் அதிகரிக்கின்றது. சில நோயாளிகள் தனியார் மருத்துவமனையில் அவற்றை எடுப்பதற்காக பெருமளவு பணம் செலவு செய்கின்றனர்.

எனவே யாழ் . போதனா மருத்துவமனையின் கதிரியக்கப் பிரிவின் மருத்துவர் பற்றாக்குறையைத் தீர்க்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நோயாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-20)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.14

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத் தலைவர் பொ.ஐங்கரநேசன், கலை இலக்கியப் பேராளுமைகளுடன் நிகழ்த்திய நேர்காணல்களின் தொகுப்பு நூலான 'வேர் முகங்கள்' நூல் வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் தலைமை உரையை யாழ்.பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறை தலைவர் கலாநிதி.செல்வமனோகரன், வெளியீட்டுரையை எங்கட புத்தகங்கள் பணிப்பாளர் கு.வசீகரன், கருத்துரைகளை ஊடகவியலாளர் சர்மிலா வினோதினி, சமூக ஆய்வாளர் தெ. மதுசூதனன் ஆகியோர் நிகழ்த்துவர். (ச-இ)



# புதிய தேர் இருப்பிடத்துக்கு நகுலேச்சரத்தில் அடிக்கல்

யாழ்ப்பாணம், செப்.14

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேச்சரப் பெருமான் தேவஸ்தானத்தில் புதிய தேர் இருப்பிடக் கட்டுமானப் பணிக்காக நேற்றுமுன்தினம் அடிக்கல் நடப்பட்டது. அதன்படி 41 அடி உயரம் கொண்ட பூசாந்திர சித்திரத் தேருக்கான புதிய தேர் இருப்பிடத்தின் கட்டுமான வேலைகளுக்காகவே நேற்றுக் காலை 9.30 மணிமுதல் 10 மணிவரை உள்ள சுபமுகூர்த்தத்தில் அடிக்கல் நடப்பட்டது. (ச-27,66,17)





கொமர்சல் வங்கியின் யாழ்.கிளையினரால் 2025 ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன. பாடசாலை ரீதியில் சித்தியடைந்த மாணவர்கள் இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர். (ச-17)

# ஊழல் மோசடியாளர்களுக்கு விரைவில் சட்டநடவடிக்கை

## மன்னார் நகர முதல்வர் தெரிவிப்பு

மன்னார்,செப்.14

மன்னார் நகரசபையில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணைக்குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன. அதற்கமைவாக ஊழல் மோசடியில் ஈடுபட்ட நபர்கள்மீது, விரைவில் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நகரசபையால் பல்வேறு விசேட தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. ஞாயிற்றுக்கிழமைகளில் காலை முதல் மதியம் 2 மணிவரை தனியார் வகுப்புகளுக்குத் தடை, போக்குவரத்தை இலகுபடுத்துவதற்காக பல இடங்களை ஒரு வழிச்சாலையாக மாற்றுதல், வாகனங்களைத் தரித்துவிடுவதற்கான இடங்களை அடையாளப்படுத்துதல், நகரசபைக்குட்பட்ட காணிகளை எல்லைப்படுத்தி, அந்தக் காணிகளைத் துப்புரவு செய்தல், நகரப் பேருந்து நிலையத்தில் வெற்றிலை எச்சில் துப்புதல்,புகைத்தல், முற்றாகத் தடைசெய்தல், பொது இடங்களில் சிறுநீர் கழித்தலுக்குத் தடை, மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்குவதில்லை உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதேவேளை பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து அடுத்த வாரம், நகரத்தில் போக்குவரத்துக்கு இடையூறை ஏற்படுத்தி, வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (க-56,60)

# பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், செப்.14

வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் அலகு மற்றும் வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகம் ஆகியவற்றின் அனுசரணையில் வலிகாமம் கிழக்கு பண்பாட்டுப் பேரவை நடத்தும் பண்பாட்டுப்பெருவிழா எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு உரும்பிராய் அருள்மிகு கற்பக விநாயகர் மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலாளரும் பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான ஈஸ்வரானந்தன் தயாரூபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநலசேவைகள் கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் சண்முகராஜா சிவஸ்ரீ, சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் அலகின் பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஜ், யாழ்.மாவட்டச் செயலக உதவி மாவட்டச் செயலாளர் தர்சினி உருத்திரகோடீஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்டச் செயலக சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சுகுணலினி விஜயரத்தினம், உரும்பிராய் மூத்த நடனக் கலைஞர் கலாபூஷணம் பத்மினி செல்வேந்திரகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41)

பருத்தித்துறையில்

# ஜப்பான் யமஹா குழுவினர் மீனவ சமூகத்துக்கு உதவி!

யாழ்ப்பாணம், செப்.14

பருத்தித்துறைப் பிரதேச மக்கள் குறிப்பாக மீனவ சமூகத்தினர் பயன்பெறும் வகையிலான செயற்றிட்டம் ஒன்றுக்கான திட்டவரைபைத் தரும்பட்சத்தில் அதற்கு நிதியனுசரணை வழங்கத் தயாராகவுள்ளதாக ஜப்பான் அதிகாரிகள் அடங்கிய யமஹா நிறுவனக் குழுவினர் தெரிவித்துள்ளார்.

ஜப்பான் அதிகாரிகள் அடங்கிய யமஹா நிறுவனக் குழுவினர் யாழ்ப்பாண விஜயத்தின்போது வடமராட்சிப் பகுதிக்குச் சென்று பருத்தித்துறை நகரபிதா வின்சன் டீ போல் டக்ளஸ் போலைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போதே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டது.

அத்துடன் பருத்தித்துறை நகரை மீளவும் கட்டியெழுப்பும் செயற்பாட்டின் அடிப்படையில் யமஹா நிறுவனத்தின் கடற்றொழில் உபகரணங்கள் தொடர்பான நிலையம் ஒன்றைப் பருத்தித்துறையில் அமைப்பது தொடர்பில் பரிசீலனை செய்யுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது. (ச-100)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி ஆசிரியர் நாகேஸ்வரன் மறைவு



யாழ்ப்பாணம்,செப்.14
தென்மராட்சியின் பிரபல தமிழ் ஆசிரியரும், கவி ஞருமான த.நாகேஸ்வரன் தனது 68ஆவது வயதில் நேற் றுமுன்தினம் காலமா னார். தென்மராட்சியில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களை வழிப்ப டுத்தி, தமிழ் கற்பித்த ஆசிரியராக இவர் விளங்கினார். இவரது இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை, சாவகச்சேரியில் அமைந் துள்ள அவரது இல்லத்தில் இடம்பெறவுள்ளன.

(சு-66)



# பருத்தித்துறை நகருக்கு 2ஆம் கட்ட ஒளியூட்டல்

யாழ்ப்பாணம், செப்.14
பருத்தித்துறை நகரசபைக்குட் பட்ட பகுதி யில் புதிய வீதி மின்விளக்குகள் பொருத்தும் நடவடிக்கை இரண்டாம் கட்டமாக முன் னெடுக்கப்பட் டுவருகி றது. நக ரபிதா வி. டக் ளஸ் போல் கண்காணிப் பில் பருத்தித் துறை நகர்ப் பகுதியில் பொருத்தப்பட் டிருந்த பழைய மின்விளக்குகள் அகற்றப்பட்டு புதிய மின்விளக்குகள் மாற்றப்படு கின்றன. இலங்கை மின் சாரசபையின் பிராந்திய அலு வலக ஊழியர் கள் மற்றும் நகரசபை ஊழி யர்கள் இணைந்து குறித்த பணியை முன் னெடுத்துள் ள னர்.

(ச-25,100)

# யாழ்.மாநகரசபையினரால் மாபெரும் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், செப்.14
பொதுமக்களின் நன்மைகருதி யாழ்.மாநகரச பையின் ஏற்பாட்டில், நாளை திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை நடமாடும் சேவை நடைபெறவுள்ளது. குருநகர்பாஷையூர் கிறீன் பீல்ட் சனசமூக நிலை யத்திலும், கொழும்புத்துறை விண்மீன் சனச மூக நிலையத்திலும், நாவாந்துறை புனித நீக்கி லாஸ் சனசமூக நிலையத்திலும் மேற்குறித்த நேரத்தில் நடமாடும் சேவை நடைபெறும். ஆத னவரி அறவிடுதல், வளர்ப்பு நாய்களுக்கான நாய்ப்பட்டி விநியோகம், துவிச்சக்கரவண்டி உரிமம் மற்றும் ஆதனங்களுக்கான பெயர்மாற் றப் படிவம் வழங்கல், கழிவகற்றல் பொறிமுறை தொடர்பான சேவை வழங்கல், கட்டடம் தொடர் பான பிரச்சினைக்கு ஆலோசனை வழங்கல், வியாபார அனுமதிக்கான ஆலோசனை வழங் கல், நீரிணைப்பு பிரச்சி னைகளுக்கான ஆலோ சனை வழங்கல், சித்த வைத்திய மற்றும் சுகாதார மருத்துவர்களினூடாக ஆலோசனை வழங்கு தல், 0777840275 எனும் முறைப்பாட்டுத் தொலைபேசி இலக் கத்தை மக்களுக்கு அறி முகப்படுத்தல் போன்ற சேவைகள் முன்னெடுக் கப்படவுள்ளன.

(ச-25)


## வேலையாள் தேவை

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள உணவகமொன்றுக்கு உணவு பரிமாறுபவர், ரொட்டி தயாரிப்பவர், சமையல் உதவியாளர் போன்ற வேலைகளுக்கு வேலையாட்கள் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
(தங்குமிட வசதி உண்டு)

**077 136 3797**

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 20 . 10 . 1937



மறைவு 13 . 09 . 2025

**அமரர் அந்தோனிப்பிள்ளை கபிரியேல் பிள்ளை**
**(திரவியம்)**

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்து நிற்கின்றோம்.

**அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ 43 வயது மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்ப்பில்லை.

தொடர்பு:- **077 905 8615**

## வேலையாள் தேவை

| | |
|---|---|
| சாரதி | மேற்பார்வையாளர் |
| கூலியாள் | விற்பனை உதவியாளர் |
| காசு வசூலிப்பவர் | கணக்காளர் |
| விற்பனைப் பிரதிநிதி | களஞ்சிய காப்பாளர் |

**077 772 2215, 075 919 1111**

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணத்தில் வீடு வாடகைக்குத் தேவை. 4 பேர் வசிக்கக் கூடிய வீடு தேவை.

தொடர்பு:- **077 317 3156**

## விற்பனைக்கு

2016 இல் பதியப்பட்ட Nissan Xtrail Car முதலாவது உரிமையாளர். 17000 Km மட்டும் பாவிக்கப்பட்ட காட்சியறை தரத்திலுள்ளதும் முழுமையான சகல வசதிகளும் கொண்ட பளுப்பு வெள்ளை கார் விற்பனைக்குண்டு. அத்துடன் எதிர்வரும் கிழமை துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்படவுள்ள Toyota Raiz Hybrid 1200cc Zero Milage பளுப்பு வெள்ளை கார் உம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: **076 325 5459**

## கண்ணீர் அஞ்சலி

சங்க உறுப்பினர் திரு.சி. ஆனந்தகுமார் அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி சின்னத்தம்பி சிவபாக்கியம்**
(கல்வயல். சாவகச்சேரி )



அவர்கள் நேற்று (13.09.2025) அன்று சிவபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை , பளை**

## We Are Hiring – Accounting, Finance Full Time Professionals and Interns

Axallant Corporation is looking for talented individuals to join our growing team!

1. Accounting Professional (Full-Time)
- Minimum **2+ years of experience** with a degree in Accounting.
- **Professional qualifications** such as CIMA and ACCA will be **added advantage.**
- Strong communication skills – must be **highly fluent in English.**
- Prior experience working with **foreign companies** is an advantage.
- Should be confident in communicating with **US native clients** (a key requirement).
- Location preference : **Jaffna.**

2. Financial Analyst Intern
- Pursuing or recently completed a **degree in Finance or finance related field** from a recognized university.
- **Good GPA** is required.
- Must be **fluent in English** (written and spoken).
- **Professional qualifications** such as CFA will be considered an **added advantage.**
- Enthusiasm to analyse financial data, business modelling, prepare reports, and support decision-making.
- Experience modelling real property investments will be a huge advantage.

**Why Join Us?**

Exposure to international work culture
Opportunity to interact directly with US clients
Career growth in a supportive environment
Based in Jaffna

Interested candidates can apply by sending their CV and cover letter to: **careers@axallant.com**

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 12 . 1942



மறைவு 13 . 09 . 2025

**சின்னத்தம்பி சிவபாக்கியம்**


இடைக்காடு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கல்வயல், சாவகச்சேரியை வதிவிட மாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவபாக்கியம் அவர்கள் நேற்று (13.09.2025) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - பொன்னம்மா தம்பதியரின் மக ளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - சின்னத்தங்கத்தின் மருமகளும், சின்னத்தம்பியின் (ஓய்வு நிலை ஆசிரியர்) அன்பு மனைவியும், ஆனந்தகுமாரின் (D.O பச்சிலைப்பள்ளி பிரதேச சபை) அன்புத் தாயாரும், தர்ஷினியின் (ஆசிரியை- யா/ கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்) அன்பு மாமியாரும், துஷானந்த் (மாணவன் - யா/இந்துக்கல்லூரி), கிஷானி (மாணவி- யா/நல்லூர் சென் பெனடிக்ற் வித்தி யாலயம்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், வள்ளியம்மாள் (அமரர்), சிவலிங்கம் (ஓய்வுநிலை ஆசிரியர்), சிவத்தம்பி, சிவலோக நாயகி (அமரர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தியாகராசா (அமரர்) அவர்களின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரன் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைக்காக கண் ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**077 6510126**
**077 459 8129**

தகவல்:
**சி.அனந்தகுமார்**
**(மகன்)**

(CR 46053) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். தந்தை வழியில் செலவுகள் ஏற்படக்கூடும். சகோதரர்கள் உதவி கேட்டுவருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பிற்பகலுக்குமேல் உறவினர்கள் வருகை சில சங்கடங்களை ஏற்படுத்தினாலும், பாதிப்பு எதுவும் இருக்காது.

**இடபம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். தாயின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்ச்சி அடைவீர்கள்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகளைக் காலையிலேயே தொடங்கிவிடுவது நல்லது. சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சிதருவதாக அமையும்.

**கடகம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். தாயின் தேவைகளை நிறைவேற்றுவதில் சிறிது அலைச்சல் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்படும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும். ஆனால், உடல்நலனில் சற்றுக்கவனம் தேவைப்படும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முடிவுகளைத் தெளிவாகச் சிந்தித்து எடுப்பீர்கள். இளையசகோதரர்கள் ஆலோசனை கேட்டுவருவார்கள். சிலருக்கு எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**துலாம்:** இன்று காரியங்கள் முடிவதில் சிறுசிறு தடைகள்ஏற்பட்டுநீங்கும். தாய்வழிஉறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். நண்பர்களிடம் எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படும்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சிதரும் நாளாக அமையும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

**தனுசு:** அதிர்ஷ்டகரமான நாள். எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். கணவன் மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்துவேறுபாடு விலகி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** உற்சாகமான நாளாக இருக்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும். ஆனால், சகோதரவகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு ஏற்படும்.

**கும்பம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தையுடன் வீண் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். உறவினர்கள் கடுமையாகப் பேசினாலும் பொறுமை அவசியம்.

**மீனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. மற்றவர்களுடன் விவாதம் செய்யநேரிட்டால் விலகிச்செல்வது நல்லது. உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படும்.

# வாழ்வாதாரத்தை மேம்படுத்த நவீனமுறை நன்மை தரும்!

### கிளிநொச்சி மாவட்டச் செயலர் தெரிவிப்பு

**கிளிநொச்சி, செப்.14**

**விவசாயிகள் பாரம்பரிய முறைகளிலிருந்து தொழில்நுட்பம் மற்றும் நவீன முறைகளைப் பின்பற்றவேண்டும். இதனூடாக வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் முன்னேற்றமடைவீர்கள் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு, விவசாய உபகரணங்கள் மற்றும் உள்ளீடு வழங்கும் நிகழ்வு, பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாயிகள் பாரம்பரிய விவசாய நடைமுறைகளுக்கு அப்பால், நவீன நடைமுறைகளுக்கு மாறவேண்டியது காலத்தின் தேவையாகும். ஏனெனில் எதிர்காலங்களில் நிலம், நீர் வரையறுக்கப்பட்டுள்ளன. நவீன விவசாயமுறையில் இவற்றைச் சிக்கனமாகப் பயன்படுத்த முடியும். சிறிய நிலப்பகுதியில் குறைந்தளவு செலவு மற்றும் உள்ளீடுகளைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறமுடியும். கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 12 ஏக்கர் நிலப்பரப்பில் 10 பச்சை வீடுகளை அமைத்து நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி, சிறிய விவசாய சமூகத்தை பரீட்சார்த்தமாக ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம். - என்றார். (க-113)



# தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி திறந்தபோட்டி

யாழ்ப்பாணம், செப். 14

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி மீசாலை பொதுநூலகத்தினரால் துண்டுப்பிரசுர திறந்த போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. "மறுமலர்ச்சிக்காக வாசிப்போம்", "போதையில்லாத தேசத்தைக் கட்டியெழுப்புவோம்'', "தற்போது அதிகரித்து வரும் விபத்துகள் இதனால் இன்று நாம் எதிர்நோக்கும் சவால்களும் இதற்கு நீர் கூறும் தீர்வுகளும்", "சமூகத்தில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்போம்'' ஆகிய தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் 'நூலகர், பொதுநூலகம், மீசாலை' எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 9)

# 'சயனைட்' நாவல் அறிமுகம்

யாழ்ப்பாணம்.செப்.14

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் செயலாளர் தீபச்செல்வன் எழுதிய 'சயனைட்' நாவல் அறிமுக நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. யாழ்.பல்கலைக்கழகத் தமிழியல் நூலகத்துக்கு 'சயனைட்' நாவல் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. தொடர்ந்து பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 100 மாணவர்களுக்குத் தொழிலதிபர் கந்தையா பாஸ்கரன் நாவல் நூல்களை இலவசமாக வழங்கினார். (க-66)

# சாய் பாபா ஜனனதின ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், செப்.14

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 100 ஆவது அவதாரத்தை முன்னிட்டு ஸ்ரீ சத்ய சாயி வெளிநாட்டுநிறுவனம் இலங்கையின் வடபிராந்திய இணைப்புக் குழுவினால் பாலவிஹாஸ் மாணவர், பெற்றோர் ஒன்றுகூடல் நிகழ்வு மானிப்பாய் ஸ்ரீ சத்ய சாயி பாபா பாடசாலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கனடாவிலுள்ள ஸ்ரீ சத்ய சாயி குளோபல் கவுன்சிலின் தலைவர் ஸ்ரீமதி அருணா சுவேந்திரன் கலந்துகொள்வார். (ச-25)

# சிறுவர் போட்டிகள்

வாசிப்பு மாதத்தையொட்டி யாழ்.மாவட்ட தேசிய கலை இலக்கியப் பேரவையும் காலையடி மறுமலர்ச்சிமன்ற நூலகமும் இணைந்து நடத்தும் சிறுவர் படைப்பாக்கப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. நான்கு பிரிவுகளாக இடம் பெறும் இந்தப் போட்டியில் முதலாம் பிரிவில் 11 -13 வயது வரையானவர்களுக்கு (தரம் 6-தரம் 8) மாணவர்களுக்குக் கதை சொல்லல், கதை ஆக்கம், பாடல் ஆக்கம் மற்றும் புத்தக அறிமுகம் ஆகிய போட்டிகளும், இரண்டாம் பிரிவில் 14-16 வயது வரையானவர்களுக்கு (தரம் 9-தரம் 11) பேச்சு, கதை ஆக்கம், விஞ்ஞான அல்லது வரலாற்றுப் புனைகதை ஆக்கம், பாடலாக்கம், புத்தக அறிமுகம், அறிவியல் கட்டுரையாக்கம் ஆகிய போட்டிகளும், மூன்றாம் பிரிவில் 17-19 வயது வரையானவர்களுக்கு (தரம் 12- 13 மற்றும் பாடசாலைக் கல்வியைத் தொடர்வோர்) சிறுவர் கதையாக்கம், விஞ்ஞான அல்லது வரலாற்றுப் புனைகதையாக்கம், சிறுவர் பாடலாக்கம், சிறுவர் புத்தக அறிமுகம் மற்றும் சிறுவர்களுக்கான அறிவியல் கட்டுரை ஆகிய போட்டிகளும், நான்காம் பிரிவில் 20க்கு மேற்பட்ட வயதினருக்கு (திறந்த பிரிவு) சிறுவர் கதையாக்கம், விஞ்ஞான அல்லது வரலாற்றுப் புனைகதையாக் கம், சிறுவர் பாடலாக்கம், சிறுவர் புத்தக விமர்சனம் மற்றும் சிறுவர்களுக்கான அறிவியல் கட்டுரை ஆக்கம் ஆகிய போட்டிகளும் இடம்பெறவுள்ளன. ஆக்கங்களை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். மேலதிக விவரங்களை 0770027621, 0718473926 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொள்வதனூடாகப் பெற்றுக்கொள்ளமுடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# தாய்லாந்தும் இலங்கையும்...!

கிளிநொச்சி உருத்திரபுரம் நீவில் குளத்தில் வெங்காய வெடியில் அகப்பட்டு நோய்வாய்ப்பட்டிருந்த யானையொன்று உயிரிழந்திருக்கின்றது. இலங்கையில் விவசாயிகளுக்கும் வனவிலங்குகளுக்கும் இடையிலான வாழிடமோதல் இன்று நேற்று நடப்பதல்ல. நீண்டதும் நெடியதுமான தொடர்கதை இது. கடந்த பலவருடங்களாகவே மனித வாழ்விடங்களுக்குள் வனவிலங்குகள் அழிவுகளை ஏற்படுத்துவதும், மனிதர்களால் மேற்கொள்ளப்படும் கோரமான தடுப்புப் பொறிமுறைகளில் சிக்கி உயிரிழப்பதும் நிகழ்ந்து கொண்டுதான் உள்ளன. 'மனித விலங்கு' வாழ்விட மோதலுக்கு அப்பால், இந்த விடயத்தில் நாங்கள் கவனிக்கவேண்டிய மேம்படுத்தவேண்டிய மற்றொரு விடயமும் மறைந்திருக்கின்றது. அதுதான் வன விலங்குகளுக்கான மருத்துவமுறை.

நீவில் குளத்தில் வெங்காய வெடியில் சிக்குண்டு காயமடைந்த அந்த யானை, நகரமுடியாமல் குற்றுயிராகவே வீழ்ந்து கிடந்தது. சுட்டெரிக்கும் வெயிலில், அந்த யானைமீது இலைகளையும், குழைகளையும் போட்டுவிட்டுத்தான் எம்மால் போகமுடிந்ததேதவிர, குறைந்தபட்சம் ஒரு மருத்துவக் கொட்டகையைக்கூட அமைக்க முடியவில்லை. பலவீனமான நிலையில், உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த அந்த யானையை வெம்மையின் தாக்கம் மேலும் பலவீனப்படுத்தியிருக்கும். இறப்புக்கான துணைக் காரணியாகவும் அது அமைந்திருக்க வாய்ப்புகள் இருக்கவே செய்கின்றன. யானை விலங்கு இடையிலான வாழ்விட மோதல் பொதுவாய்ப் போய்விட்ட காரணத்தால், இவ்வாறான மருத்துவ அணுகுமுறைகள் மிகவும் முக்கியத்துவம் மிக்கவை.

வனவிலங்குகளுக்கான மருத்துவத்தின்போது குறிப்பாக யானைகளுக்கான மருத்துவத்தின் போது, இவ்வாறான மேம்பட்ட வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டியது அரசாங்கத்தின் பிரதானமான கடமையாகவும் அமைகின்றது. ஏனெனில், யானைகளைத் தவிர்த்துவிட்டு இலங்கையின் வரலாற்றை எழுதிவிடமுடியாது. இலங்கைக்கு சுற்றுலாவிகள் படையெடுப்பதற்கான பிரதான அம்சமாக வனப்புறும் வனங்களும் அதில் உலவும் யானைகளுமே காணப்படுகின்றன. எனவே, மிகவும் உச்சபட்ச கவனத்தைச் செலுத்த வேண்டிய இந்த விடயத்தில் நாங்கள் மீண்டும் மீண்டும் தோல்வியடைந்தே வருகின்றோம். மீளவும் சரிசெய்யமுடியாத வகையில் ஒன்றன் பின்னர் ஒன்றாக பெரும் தவறுகளை இழைக்கின்றோம்.


இலங்கையைப்போலவே தாய்லாந்தின் பொருளாதாரத்திலும் யானைகள் பெரும் பங்களிப்பை நேரடியாகவும் மறைமுகமாகவும் வழங்குகின்றன. அங்கு யானைகளை அவ்வளவு நேர்த்தியாகப் பராமரிக்கின்றனர். அதனால்தான், இலங்கைக்கு வழங்கிய சக் சுரின் என்ற யானை முறையாகப் பராமரிக்கப்படவில்லை என்பதால், அந்த யானையைத் தாய்லாந்து திரும்பப் பெற்றுக் கொண்டது. இலங்கையுடனான தூதரக உறவுகள், இராஜதந்திர உறவுகள் என எதையும் அந்த நாடு கருத்திற்கொள்ளவில்லை. இதன்மூலம், அந்த நாடு யானைகளுடன் எவ்வளவு ஒன்றித்திருக்கின்றது என்பதை வெளிப்படுத்தியது. இவ்வாறான ஆகச்சிறந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் முடியாவிட்டாலும், அதற்கு அருகிலாவது செல்ல வேண்டும். ஏனெனில், 'தேசியப் பொருளாதாரம்' என்ற ரீதியில் யானைகள் எம்மை வாழ்விக்கின்றன.



## நாளொரு நல்வார்த்தை

உன் வாழ்க்கையின் எந்த ஒரு நாளில் உன் முன்னால் எந்தப் பிரச்சினையையும் நீ சந்திக்காமல் முன்செல்கிறாயோ, அப்பொழுது தவறான பாதையில் நீ பயணிக்கிறாய் என்று அறிவாய்.

– வில்லியம் ஷேக்ஸ்பியர் –




# நாட்டை நவீனமயப்படுத்த பட்ஜெட்டில் விசேட கவனம்



## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

**கொழும்பு, செப்.14**

**நாட்டை நவீனமயப்படுத்த இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் விசேட கவனம்செலுத்தப்பட்டுள்ளதுடன் அரச சேவைக்குத் தேவையான நவீன தொழில்நுட்பம் மற்றும் வசதிகளை வழங்கி டிஜிற்றல் மயமாக்கல் வேலைத்திட்டத்துக்குப் பங்களிப்பு வழங்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி அலுவலகத்தில் இலங்கை இளம்தொழில்முனைவோர் மன்றத்தின் பிரதிநிதிகளுடன் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்ட பூர்வாங்கக் கலந்துரையாடலில் பங்கேற்றபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.


இந்தத்துறையின் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது ஏற்பட்டுள்ள சவால்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியிடம் பிரதிநிதிகள் எழுத்துபூர்வமாகத் தெரிவித்ததுடன், அதற்கான முன்மொழிவுகளையும் சமர்ப்பித்தனர்.

வர்த்தகத்துறைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், சட்டவிதிகளை உருவாக்குதல் மற்றும் ஒழுங்குபடுத்ததலை அரசாங்கம் மேற்கொள்கிறது. உள்நாட்டு வர்த்தகர்களுக்கு மற்றும் தொழில்முனைவோருக்கு சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்தி, அவர்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முழுமையாக பங்களிக்க உதவுவது, அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் என்று இதன்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (ச-இ)

## 24 மணிநேரத்தில் 5,000 + பேர் கைது

கொழும்பு, செப்.14

இலங்கையில் ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 5 ஆயிரத்து 88 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து கடந்த வியாழக்கிழமை இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். (ச-இ)



## பொரளையில் துப்பாக்கிச்சூடு; பிரதான சந்தேகநபர் கைது!

கொழும்பு, செப்.14

கொழும்பு - பொரளைப் பகுதியில் இரண்டு பேரைச் சுட்டுக்கொன்ற சம்பவத்தில் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக சந்தேகிக்கப்படும் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் 10 கிராம் 710 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணையில், சந்தேகநபர் முன்னர் இலங்கை இராணுவத்தில் பணியாற்றியவர் என்றும், 2015ஆம் ஆண்டு இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர் என்றும் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## பெக்கோ சமனின் சகா கைது

தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான பெக்கோ சமனின் நெருங்கிய சகா ஒருவர் எம்பிலிபிட்டிய பகுதியில் துப்பாக்கியுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து ரி-81 ரகத் துப்பாக்கி, 97 தோட்டாகள், 2 மகசின்கள் மற்றும் இராணுவ சீருடையொன்று என்பன மீட்கப்பட்டுள்ளன. (ச-இ)

## 'சிப்தொற' புலமைப்பரிசில் விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், செப்.14

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சமுர்த்திப் பயனாளிகளின் பிள்ளைகளுக்கான 'சிப்தொற' புலமைப்பரிசில் கல்வி உபகாரநிதி பெறுவதற்கான விண்ணப்பங்கள் பிரதேச சமுர்த்தி அலகினால் கோரப்பட்டுள்ளன. இறுதியாக வெளிவந்த க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் 2023 ஜுன் வரை சமுர்த்தி முத்திரை பெற்று நலன்புரிக் கொடுப்பனவு பெற்றுக் கொள்ளாத குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் 'சிப்தொற' புலமைப்பரிசில் பெறுவதற்காக தத்தமது பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25.9)

**நாளை**
திங்கட்கிழமை - ஆவணி 30
15.09.2025
சுபநேரம் : 12.03 - 01.33
ராகுகாலம் : 07.33 - 09.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANGEL INTERNATIONAL SCHOOL MANIPAY

## Congratulations to our Top Performers in Cambridge Examination May / June 2025

**A2 - MATHS STREAM**



MISS. THARMAVATHY BAVAPPERIYAN
A*, 2A

**A2 - SCIENCE STREAM**



MISS. GASVINY SHANTHAKUMAR
2A, B

**A2 - MATHS STREAM**



MAS. THAVAKUMAR SARANJAN
A, 2B

**AS - SCIENCE STREAM**



MISS. ELILNILA HARAN
3A

**AS - MATHS STREAM**



MAS. STANDLY DILAN SRISKANDARAJAH
2A, B

**AS - SCIENCE STREAM**



MISS. BARSHIYA LAVAKEESAN
3B

**AS - MATHS STREAM**



MISS. SARANIYA SILUVAITHAS
A, B

**OL- SCIENCE STREAM**



MAS. JEEVAKAN DARVINTH
6A*, A

**OL- SCIENCE STREAM**



MAS. SRILANKANATHAN JERON
4A*, A, B

**OL- SCIENCE STREAM**



MAS. SUBASKARAN SANTHOSH
A*, 2A, 3B, C

**OL- SCIENCE STREAM**



MISS. AKSHAYA AGILAN
A*, 2A, 3B, C

**OL- COMMERCE STREAM**



MAS. BAKEERATHAN KETHARAN
4A, B, 2C

**ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை - கேம்பிரிட்ஜ் மதிப்பீட்டு சர்வதேச கல்வித் தேர்வுகளில் மிகப் பிரகாசமாக மிளிர்கிறது.**

2006 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் திகதி வணக்கத்திற்குரிய போதகர் சாம் ராஜசூரியர் அவர்களால் நிறுவப்பட்டதிலிருந்து, ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை இலங்கையின் வடமாகாணத்தில் சர்வதேச கல்வியில் முன்னோடியாக திகழ்ந்து வருகிறது. மானிப்பாயின் இதயப்பகுதியில் அமைந்துள்ள இப்பாடசாலை, தேசிய மற்றும் கேம்பிரிட்ஜ் பாடத்திட்டங்கள் மூலம் உயர்தரக் கல்வியை தொடர்ந்தும் வழங்கி வருகிறது. இவை அனைத்தும் ஆங்கில மொழி ஊடாக மட்டுமே கற்பிக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பாடசாலை அதிபர் அவர்களின் தூரநோக்கு தலைமையின் கீழ், ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை, வடமாகாணத்தில் 3 வயதிலிருந்து உயர்தரம் வரை மாணவர்களுக்கு முழுமையான கல்விப் பயணத்தை வழங்கும் ஒரே ஒரு சர்வதேச பாடசாலையாக உயர்ந்துள்ளது. இந்த தனித்துவமான வாய்ப்பு, எண்ணற்ற மாணவர்களுக்கு தங்களின் கனவுகளை பின்தொடரவும், எட்ட முடியாதபோலத் தோன்றிய கல்விச் சாதனைகளை அடையவும் உதவியுள்ளது.

**மே / ஜூன் 2025 தேர்வுகளில் சிறப்பான சாதனைகள்**

2025 மே/ஜூன் மாதங்களில் நடைபெற்ற கேம்பிரிட்ஜ் மதிப்பீட்டு சர்வதேச கல்வித் தேர்வுகளில் மாணவர்களின் சிறந்த சாதனைகளை பெருமையுடன் பாடசாலை கொண்டாடுகிறது. சிறந்த சாதனையாளர்களில்:

- செல்வி. தர்மாவதி பவப்பிரியன் (A2 கணிதப் பிரிவு): A*, 2A
- செல்வி. கஸ்வினி சாந்தகுமார் (A2 விஞ்ஞானப் பிரிவு): 2A, B
- செல்வன். தவக்குமார் சரண்ஜன் (A2 கணிதப் பிரிவு): A, 2B
- செல்வி. எழில்நிலா ஹரன் (AS விஞ்ஞானப் பிரிவு): 3A
- செல்வன். சிறீஸ்கந்தராஜா ஸ்ரான்லி டிலான் (AS கணிதப் பிரிவு): 2A, B
- செல்வி. பர்ஷியா லவகீஷன் (AS விஞ்ஞானப் பிரிவு): 3B
- செல்வி. சரண்யா சிலுவைதாஸ் (AS கணிதப் பிரிவு): A, B
- செல்வன். ஜீவகாந் டர்விந் (OL விஞ்ஞானப் பிரிவு): 6A*, A
- செல்வன். சிறீலங்கநாதன் ஜெரோன் (OL விஞ்ஞானப் பிரிவு): 4A*, A, B
- செல்வன். சுபாஸ்கரன் சந்தோஷ் (OL விஞ்ஞானப் பிரிவு): A*, 2A, 3B, C
- செல்வி. அக்ஷயா அகிலன் (OL விஞ்ஞானப் பிரிவு): A*, 2A, 3B, C
- செல்வன். பகீரதன் கேதாரன் (OL வர்த்தகப் பிரிவு): 4A, B, 2C

**குறிப்பிடத்தக்க சாதனைகளைப் பெற்றுள்ளார்கள்.**

இந்தப் பெறுபேறுகள், கல்வித் திறமை மற்றும் மாணவர் முன்னேற்றத்திற்கான பாடசாலையின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பின் சான்றாகும். ஏஞ்சல் சர்வதேச பாடசாலைச் சமூகம், இந்த வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் தேர்வில் வெற்றிகரமாகத் தேர்ச்சி பெற்ற அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவிக்கிறது. இவர்கள் இப்போது தங்கள் கல்விப் பயணத்தின் அடுத்த கட்டத்தை ஆரம்பிக்க தயாராக உள்ளனர்.

ஒவ்வொரு மாணவரின் வெற்றியின் பின்னாலும் ஒரு ஆதரவுத் தளம் உள்ளது. இந்த இளம் மனங்களை வழிநடத்தவும் தயார் செய்யவும் அயராது உழைத்த அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களுக்கும் மற்றும் ஊக்கமளித்த பெற்றோர்களுக்கும் கல்விச்சமூகம் தனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது. அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் ஊக்கம், மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளது.

வடமாகாணம் முழுவதும் குடும்பங்களுக்கு நம்பிக்கையையும் சர்வதேச தரத்திலான கல்வி வாய்ப்புக்களையும் வழங்கி எதிர்கால வெற்றிகானதோர் வழிகாட்டியாக உள்ளது. சிறந்த கல்வித்தரம் ஒழுக்கம் சமூக மதிப்பீடுகளின் அடிப்படையில் எதிர்கால ஆற்றல்மிகு தலைவர்களை, பிரஜைகளை, சிந்தனையாளர்களை உருவாக்கும் பாடசாலையாக மிளிர்கிறது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பழைய வீட்டினை இடிப்பதற்கு

நீர்வேலியில் அமைந்துள்ள வீட்டினை இடித்து அதன் பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்.
(வீட்டினை தாங்களே இடித்தல் வேண்டும்)
பார்வையிட்ட பின் விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 074 292 5923

## GCE A/L General English Syllabus

SPOKEN & GRAMMAR கற்பிக்க விரும்பும் யாழ் தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பு கொள்ளவும்.

K Ganesh BA (UOP)
0777668725

## ஆட்கள் தேவை

Tellippalai Blue whale Hypermarket நிறுவனத்திற்கு விற்பனையாளர்கள் மற்றும் முகாமையாளர்கள் தேவை. சுயவிபரக் கோவையை (Bio Data) 076 778 5120 என்ற Whatsapp இலக்கத்திற்கு எதிர்பார்க்கும் சம்பள விபரம் அடங்கலாக அனுப்பி வைக்கவும்.

தொடர்பு: 077 398 5120
076 778 5120

(CS 59390) E

## காணி விற்பனைக்கு

வவுனியா தவசிக்குளத்தில் இரண்டு ஏக்கர் உறுதிக்காணி விற்பனைக்கு உண்டு. 50 தென்னைகள், நான்கு மாமரம் இரண்டு அறைகள் கொண்ட வீடு மற்றும் பயன்தரும் மரங்களுடன் 22 அடி சுற்றளவு கொண்ட தோட்ட கிணறும் உண்டு.

தொடர்புகளுக்கு:-
076 776 0459, 077 628 8923

## வேலையாட்கள் தேவை

பிரபல அச்சகம் ஒன்றிற்கு Type System, Corel draw, Photoshop , indesign தெரிந்த அனுபவம் உள்ள பெண் வேலையாட்கள் உடனடியாக வேண்டும். தகுந்த சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். மற்றும் யாழ்ப்பாணம் கிளிநொச்சி ஆகிய இரு இடங்களுக்கும் தேவைப்படுகின்றனர்.
K.K.S Road, யாழ்ப்பாணம், கிளிசொச்சி.

077 774 6855, 075 774 6855, 070 774 6855

(CS/59379) J-1

## கடை வாடகைக்கு தேவை

சாவகச்சேரி A9 வீதி நுணாவில் மத்தியில் 1ம் மாடியில் சகல வசதிகளுடன் கூடிய கடை வாடகைக்கு உண்டு

தொடர்புகளுக்கு:
077 171 2877

(CS 59409) E

## மணமகள்கள் தேவை

இந்து கௌரவ குடும்பம். உள்நாடு. வெளிநாடு மணமகன்களுக்கு A/L படித்த 1985 - 1999 வரையான மணமகள்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
071 205 2313


## வீடு வாடகைக்கு

மந்திகை வைத்தியசாலைக்கு அருகில் வல்லிபுர கோவிலுக்குச் செல்லும் வீதி உபயகதிர்காம கோவிலடி பிரதான வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. ஒரு வரவேற்பறை, மூன்று அறைகள் சமையலறை, கொமோட் பாத்ரூம், சுற்றிவர மதில், வாகனத்தரிப்பிட வசதி உண்டு. உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
071 838 7393, 071 525 5268

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 10 . 1935



மறைவு 13 . 09 . 2025

## அமரர் சதாசிவ ஐயர் ஜோதீஸ்காமக்குருக்கள்

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி கும்பழாவளையை வசிப்பிடமாகவும் கொண்ட பருத்தித்துறை புலோலி பசுபதீஸ்வரர் தேவஸ்தான முன்னாள் பிரதம குரு, சதா. ஜோதீஸ்காமக்குருக்கள் நேற்று 13.09.2025 சனிக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவஐயர் நாகம்மா தம்பதியினரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற சீதாலக்ஷ்மி அம்மா அவர்களின் அன்புக் கணவரும், இரத்தினசபாபதிக்குருக்கள், காலஞ்சென்றவர்களான பாலகுமாரசுவாமிசர்மா, திருச்செந்தில்நாதசர்மா, மனோன்மணி அம்மா மற்றும் கருணாகரசர்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மநாதக் குருக்கள் (கண்டி), கோகில ராணி, சாந்தினி தேவி, ஸ்ரீசிவநாதசர்மா, சர்வேஸ்வரநாத குருக்கள், வத்சலா தேவி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ராங்கநாயகி, ரகுநாதசர்மா, வேணுகோபாலசர்மா, அனுசூயா, சாந்தினி, குமாரதாஸக்குருக்கள், ஆகியோரின் அன்பு மாமனாரும், நிசாந்தி, உமாசுதக்குருக்கள், ரங்கநாதக்குருக்கள், கேசனா, ராகவசர்மா, கஸ்தூரி, கஜபரக்குருக்கள், கஜானி, தேனுகா, அம்சவர்த்தனா, விஸ்வசுந்தர் சர்மா, அபராஜித சர்மா, தர்ஷனா, வர்ஷா ஆகியோரின் பாசமிகு பேரனும், ஸ்ரீராம், வர்ஷினி, ஆத்மீகா, தர்ணீஸ், கஜஸ்ரீ, பிரணீஸ் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 14.09.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியளவில் அபரக்கிரியைகள் அவரது இல்லத்தில் (அளவெட்டி) நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கும்பழாவளை,
அளவட்டி மத்தி,
யாழ்ப்பாணம்

தகவல்
குடும்பத்தினர்
077 628 3865, 071 421 7630

(CS 59402) E

# மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 06 . 1945



மறைவு 11 . 09 . 2025

## ஸ்ரீ சூரியபகவதி குமரகுரு

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட ஸ்ரீசூரியபகவதி குமரகுரு அவர்கள் கடந்த (11.09.2025) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான சந்திரசேகரன் - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குமரகுரு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற காவஸ்கர் அவர்களின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களானநடேசன், இராஜரத்தினம், சரோஜினி, சந்திரசேகரம், இந்திராணி ஈகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (15.09.2025) திங்கட்கிழமை காலை 08.30 மணியளவில் 288, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று கெலன் தோட்டத்தில் உள்ள Assemble of God என்ற சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

றஜீந்திரன் - +1 (416) 689-7963,
சுரேஷ் - +1(416) 843-1726

தகவல்:
குடும்பத்தினர்

(CS/59407) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாகாணசபை தேர்தல்களை நடத்துமாறு வலியுறுத்து!

மாகாணசபைத் தேர்தலை அரசாங்கம் உடனடியாக நடத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

மாகாணசபைத் தேர்தலைக் கண்டு அரசாங்கம் எதற்காக அஞ்சுகின்றது? இந்தத் தேர்தல் நடத்தப்பட்டால் அரசாங்கத்துக்குள்ள மக்கள் ஆணை என்ன என்பது வெளிப்படும். அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பதைப் போன்று மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்துமாறும் கூட்டு எதிரணியாக அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிப் போம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 12 . 1948



மறைவு 13 . 09 . 2025

### சிவசோதி தையல்நாயகி

பெருங்குளம் சந்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், மீசாலை மேற்கு, மீசாலையை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட சிவசோதி தையல்நாயகி அவர்கள் நேற்று (13.09.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-பிள்ளையம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா-விஜயலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவசோதி அவர்களின் அன்பு மனைவியும், சுதர்சினி (சுவிஸ்), சிவதர்சினி (மீசாலை), சிவசங்கர் (சுவிஸ்), சுபாஜினி (மீசாலை), சிவவதனி (மீசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விக்கினேஸ்வரன் (சுவிஸ்), யதுஸ்ஸா (சுவிஸ்), சதீஸ்வரன் (மீசாலை), யோகேந்திரன் (மீசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், டக்ஸன் (சுவிஸ்), டனுக்ஸன் (சுவிஸ்), மதிவதனி, மதுஷன், காவியா, கபிஷேக், அக்ஷிதா, ஷயா (சுவிஸ்), ஆதிஸ் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் வாசுகி (கல்வியங்காடு), கபிலன் (கல்வியங்காடு), சயந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியம்மாவும், காலஞ்சென்றவர்களான அருந்தவநாயகி, இந்திராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கரியைகள் இன்று (14.09.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கிரியைகள் இடம்பெற்று நண்பகல் 12.00 மணிக்கு தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**பொன்னர் ஒழுங்கை,**
**மீசாலை மேற்கு,**
**மீசாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**075 8539297**

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 06 . 1942



மறைவு 10 . 09 . 2025

### அமரர் திருமதி. சுப்பிரமணியம் கமலாதேவி
**(பெரியபிள்ளை)**

சரவணை கிழக்கை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கமலாதேவி அவர்கள் கடந்த (10.09.2025) புதன்கிழமை சிவபதமடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஸ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - முத்தாச்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், கருணாநிதி (கனடா), ராஜேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் தர்மகுலசிங்கம் (ஜேர்மனி), வரதராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவயோகம் (சாந்தா இத்தாலி), சற்குணராசா (கண்ணன்), கோசாலை (உமா), விஜயராசா (விஜயன் பிரான்ஸ்), விஜிதா (விஜி பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இந்திரகுமார் (இத்தாலி), ராஜேஸ்வரி, துஜிகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற பொன்னம்பலம், அழகியநாதன், சிவபாக்கியம் மற்றும் வனஜா, தாரணிதேவி (ஜேர்மனி), தர்மலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், கோகுலன், தருண், விகாஷினி, அஸ்விதா, கோஷிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2025) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாங்கண்டி இந்து மயானத்திற்கு எடுத்துசெல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**071 638 2702**

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 01 . 1947



மறைவு 13 . 09 . 2025

### சண்முகம் பொன்னம்பலம்

யாழ்ப்பாணம் எழுதுமட்டுவாழை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் பொன்னம்பலம் நேற்று (13.09.2025) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - மாணிக்கம் தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அண்புக் கணவரும், நாககீதன், நாகவரதன், நாகதர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தரூபி, நிர்த்திகா, தசாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், விதுர்சன், தனுசிகா, டினுஜா, சர்வின், அக்சரா, ஆரூஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.09.2025) திங்கட்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இராமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பனிக்கையடி வீதி**
**எழுதுமட்டுவாழ் தெற்கு**
**எழுதுமட்டுவாழ்**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 294 4783**
**[illegible]**

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 12 . 1949



மறைவு 12 . 09 . 2025

### அமிர்தகௌரி நடேசபிள்ளை
**(நயினாதீவு 6ம் வட்டாரம்)**

நயினாதீவு 6ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வவுனியா- வெளிக்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட அமிர்தகௌரி நடேசபிள்ளை அவர்கள் கடந்த (12.09.2025) வெள்ளிக்கிழமை காலமானர்.

அன்னார் Dr. சாந்தினி (சித்த மத்திய மருந்தகம் - வவுனியா நகரம்) அவர்களின் அன்புத் தாயாரும், Dr. சிவகுமார் (சித்த மத்திய மருந்தகம் - மடுகந்தை) அவர்களின் அன்பு மாமியாரும், தாருகா (முகாமைத்துவ உத்தியோகத்தர் - வவுனியா பல்கலைக்கழகம், பவான் (மருத்துவ பீடம் - யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), சியாமளன் (தகவல் தொழில்நுட்பம் - மொறட்டுவ பல்கலைக்கழகம் இவர்களின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2025) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 8.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் வெளிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல 28,** 2nd Mile post,
R.D.S **வீதி, வெளிக்குளம்,**
**வவுனியா.**

**தகவல்: குடும்பத்தினர்**
**மகள்** - 0770665574
**பேர்த்தி** - 0769601739

(CR/46048) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்பிடி உபகரணத் தொழிற்சாலை காரைநகரில் அடுத்தவாரம் திறப்பு

**யாழ்ப்பாணம், செப்.14**

**காரைநகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள, மீன்பிடி உபகரணங்கள் தொழிற்சாலையின் செயற்பாடுகள் எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.**

கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோர் தொழிற்சாலையின் செயற்பாடுகளைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கவுள்ளனர்.

தொழிற்சாலைத் தயாரிப்புகளின் மாதிரிகளை அன்றைய தினம் மக்கள் பார்வையிடமுடியும். சுமார் 100 முதல் 150 திறன் சாதாரண கட்டுமரம் அளவிலான தோணி, 30 அடி நீளமான படகுகள், மீன் வளர்ப்புத் தொட்டிகள், மீன் விற்கும் வண்டிகளில் பொருத்துவதற்கான குளிரூட்டக்கூடிய பெட்டி என்பவற்றை இங்கு தயாரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முன்னோட்டமாக படகு, மீன் விற்கும் தாங்கி, மீன் குஞ்சு வளர்ப்புத் தொட்டி என்பன தயாரிக்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாணத்தில் குறித்த தொழிற்சாலை கடற்றொழில்சார் உபகரணத் தேவைகளைத் தன்நிறைவோடு வழங்கும் என்று இலங்கை சீனோர் நிறுவனம் தெரிவித்துள்ளது. (க -66)




# மகாகவி பாரதியாரின் 104ஆவது நினைவுதினம்

வவுனியா,செப். 14

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 104ஆவது நினைவுதினம் வவுனியா குருமன்காட்டுச் சந்தியில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலையடியில் கடந்த புதன்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது கவி அஞ்சலியை கிருஷ்ணராஜ் லிசாந்தினியும் பாரதி தொடர்பான நினைவுரையை ஆசிரியர் கதிர்வண்ணனும் வழங்கினர்.

வவுனியா மாநகரசபை மேயர் சு.காண்டீபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மாநகரசபை பிரதி மேயர் ப.கார்த்தீபன், மாநகரசபை உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள்ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25,110)



# எல்ல விபத்தில் உயிரிழந்தோருக்கு வவு.மாநகரசபை அமர்வில் அஞ்சலி

வவுனியா.செப்.14

அண்மையில் எல்ல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு வவுனியா மாநகரசபை அமர்வில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடந்த 4 ஆம்திகதி இரவு எல்லபகுதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் தங்காலை நகரசபை ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் உட்பட 15 பேர் உயிரிழந்திருந்தனர். அவர்களின் ஆத்ம சாந்திக்காக வவுனியா மாநகரசபையின் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற அமர்வில் அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-25.110)




# தென்மராட்சிப் பிரதேச பண்பாட்டுப்பெருவிழா

சாவகச்சேரி, செப்.14

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் வருடாந்த பண்பாட்டுப் பெருவிழா சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள மூத்த நாதஸ்வரக் கலைஞர் அமரர் பஞ்சாபிகேஷன் அரங்கில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிப் பிரதேச செயலகம் மற்றும் தென்மராட்சி பிரதேச கலாசாரப் பேரவை ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், பண்பாட்டுப் பெருவிழா பிரதேச செயலாளரும் பிரதேச கலாசாரப் பேரவைத் தலைவருமான எப்.சி சத்யசோதி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கலைஞர்களுக்கான 'கலைச்சாகரம்' விருது நால்வருக்கும் மற்றும் 'இளங்கலைஞர்' விருது மூவருக்கும் வழங்கப்பட்டதுடன், கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ச-25, 9 ,131)



வடக்கு மாகாண விவசாய அமைச்சின் குறித்தொதுக்கப்பட்ட நிதியின்கீழ் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக விவசாய உபகரணங்கள் மற்றும் உள்ளீடு வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.சோதிலட்சுமி தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ச-25, 113)



# ஆசிரியர் கலாசாலையில் பாரதியார் நினைவரங்கம்

யாழ்ப்பாணம், செப்.14

மகாகவி பாரதியாரின் 104ஆவது நினைவுநாளையொட்டி பாரதியார் நினைவரங்கம் நிகழ்வு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன் தலைமையில் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் கலாநிதி. எஸ்.ஜெபநேசன் அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். கலாசாலையின் தமிழ்த்துறை விரிவுரையாளர் கவிஞர்.வேல் நந்தகுமார் அதிதிக்கான அறிமுக உரையை நிகழ்த்தினார். நிகழ்வைக் கலாசாலையின் முதலாம் வருட ஆசிரிய மாணவர் தங்கராசா தர்சன் முன்னிலைப்படுத்தினார்.

கலாசாலையின் முதலாம் வருட ஆசிரிய மாணவி இ. ஜெயராணி, இரண்டாம் வருட ஆசிரிய மாணவன் இ. செந்தூர்ச்செல்வன் மற்றும் இரண்டாம் வருட ஆசிரிய மாணவி இ. தேவமணி ஆகியோர் பாரதியார் கவிதைகள் குறித்த நயவுரைகளை வழங்கினர். கலாசாலையின் முதலாம் வருட ஆசிரிய மாணவி நி. கௌசிகா பாரதியார் பற்றிய ஆவணக் காணொலியைத் தயாரித்துக் காட்சிப்படுத்தினார். (ச-25,66)

பருத்தித்துறை ஓடக்கரை அன்னை வேளாங்கண்ணி மாதா ஆலய வருடாந்தப் பெருவிழா கடந்த திங்கட்கிழமை நிறைவடைந்தது. சிறப்பு வழிபாடுகளுடன் புனித மரியாளின் திரு உருவம் தாங்கிய கொடி இறக்கம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்பட்டது. (ச-25,100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.14

வலிகாமம் தெற்கு (உடுவில்) பிரதேச செயலகப் பிரிவின் 2025 ஆம் ஆண்டுக்கான மூன்றாவது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 09.30 மணியளவில் வலிகாமம் தெற்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ். ஸ்ரீபவானந்தராஜா தலைமையில் குறித்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இடம்பெறும்.

(ச-66)


## வேலையாட்கள் தேவை

**Harmoney Investment (PVT)**
**நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை**

- களஉத்தியோகத்தர் - கிளிநொச்சி (Basic : 40000/= - 100000/=)
- Auditor - சாவகச்சேரி (அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. 25 வயதிற்கு மேல்)

சுயவிபரக் கோவையை கீழ்காணும் இலக்கத்திற்கு Whatsapp செய்யவும்

**077 513 5263**

(CS 59354) E

**யாழ் மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்**
**The Jaffna District Textile Weaver's Co-op Society Ltd**

Yaral Co-op Textile Mill Kondavil | Reg.No J/1609 (19.01.1973) T.p No - 0213218263 | Irupalai Road Kondavil

**யாழ் மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் வது பதிவு இல - J/1609**

**சங்க கட்டிடம் வாடகைக்கு விடல்**

எமது சங்கத்தில் 144 அடி நீளமும் 80 அடி அகலமும் கொண்ட (11520 சதுர அடிகள் விஸ்தீரணமுடைய கட்டிடம் வாடகைக்கு விடப்படும். அலுவலக நேரத்தில் (08.30 - 04.30) வரை பார்வையிட முடியும்.

தலைவர்
யா.மா.பு.நெ.கூ.சங்கம்
077 469 8262 077 504 4671

இருபாலை வீதி,
கோண்டாவில்

(CR 45091) E


## ஏழாம் ஆண்டில் இதயம் சுமக்கும் நினைவுகள்

மண்ணில் 04 . 03 . 1934



விண்ணில் 14 . 09 . 2018

### அமரர் சவேரியாப்பிள்ளை பிலிப்பு

ஆண்டு ஏழு சென்றதுவோ எம் அன்பு நிறை
அம்மாவின் திருவதனம் கண்டு
நின் அன்பு மொழியுடன் நற்செயல்களால்
எம்மை மகிழ்வித்து உம்மை உருக்கி
எமக்கு நல்வாழ்வளித்த எம் அன்புத் தாயை
நன்றி உணர்வுடனே நினைக்கின்றோம் இந்நாளில்
நின் ஆன்மா இறைவனில் அமைதி பெற
இறையருள் வேண்டுகின்றோம்.

கச்சாய் வீதி
கொடிகாமம்

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 59358) E

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 10 . 1948



மறைவு 11 . 09 . 2025

### சின்னத்துரை கமலாம்பிகை

புங்குடுதீவு 11ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி 19/4 முன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கமலாம்பிகை அவர்கள் கடந்த (11.09.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பரமேஸ்வரி (கருணி) மற்றும் இலகநாதன் காலஞ்சென்ற திலகநாதன் மற்றும் லோகநாதன், பத்மாவதி (இந்திரா), பரமேஸ்வரன் (சிவம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் மகேந்திரலெட்சுமி, மகேஸ்வரி காலஞ்சென்றவர்களான செல்வராணி, பாலசுப்பிரமணியம் மற்றும் சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.09.2025) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19/4 முன் வீதி,
திருநெல்வேலி

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
021 222 7353

(CS/59399) J-1

## 1ம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 26.08.2024 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் வல்லிபுரம் செல்லத்துரை

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று (14.09.2025) ஞாயிற்றுக்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று மதிய போசனம் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மதியபோசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஐயா கடையடி,
மீசாலை.

குடும்பத்தினர்

(CS/59306) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீங்கள் தயாரா?

AI-இன் எதிர்காலத்தை அனுபவித்திட

இலங்கையின் முதலாவது தேசிய
AI கண்காட்சி மற்றும் மாநாடு 2025

திகதி:
செப்டம்பர் 29 மற்றும் 30

இடம்:
மோனார்க் இம்பீரியல், கொழும்பு

இப்போதே விஜயம் செய்யுங்கள்:
WWW.AIEXPO.LK

PROUDLY PIONEERED BY:
SLTMOBITEL SLASSCOM FITIS HUAWEI

NATIONAL AI EXPO

---

## NIPPON®
*The Original*

பயன்படுத்தப்பட்ட பொருட்கள் இல்லை,
ஒரிஜினல் A தரமுள்ள பொருட்களை பயன்படுத்தி செய்யப்பட்டது.

தர நிர்ணய சபையினால் அங்கீகரிக்கப்பட்டு நேரடியாக
தொழிற்சாலையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது.

No.1 Seller




1 YEAR

0.6L
1L
1.5L
1.8L
2.2L
2.8L
4300/- upwards

நாடுப்பூராகவும் உள்ள முன்னணி விநியோகஸ்தர்களிடமிருந்து
பெற்றுக்கொள்ளலாம்...

**லங்கா நிப்போன்**
20, Keyzer Street, Colombo 11. 011 2437735 / 011 2437736
info@lankanippon.com | www.lankanippon.com

போலிகளில் அவதானமாயிருங்கள்..!

---

## பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் இயங்கி வருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு பெண் பராமரிப்பாளர் தேவை. உணவு தங்குமிட வசதி இலவசம். தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**நிர்வாகி**

(CS 59404) E

**077 810 6857, 075 974 2495,
021 226 5551**
www.valvaieldershome.com

---



## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்

இந்தியாவில் ஆன்மீகத்துறையில்
10 வருடங்களாக புகழ்பெற்ற

## அம்மன் அருள் வாக்கு

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?
- மனதில் நிம்மதி இல்லையா?
- வாழ்வில் நிம்மதி இல்லையா?



அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல. 20/16, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)

தொடர்புகளுக்கு :- **077 281 1234**

---

# விசேட அறிவித்தல்



இது சிலோன் கிரீன் லைஃப் பிளான்டேஷன் (பிரைவேட்) லிமிடெட் உடன் வணிக உறவுகளைக் கொண்ட அனைத்து நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் கவனத்திற்கு

எங்கள் நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளராகப் பணிபுரிந்து வந்த, **இல.30, அமானுல்லா வீதி, காத்தான்குடி 06, இல் வசிக்கும் எம்.எஃப்.மஃபாஹிரா (தேசிய அடையாள அட்டை இல. 877994287V),** என்பவர் **2025 ஓகஸ்ட் மாதம் 04,** ஆம் திகதி முதல் எங்கள் நிறுவனத்தில் பணியில் இல்லை என்பதனை இதன் மூலம் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இதற்கு பிறகு சிலோன் கிரீன் லைஃப் பிளான்டேஷன் (பிரைவேட்) லிமிடெட் சார்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு பரிவர்த்தனைக்கும் எங்கள் நிறுவனம் பொறுப்பேற்காது என்பதனை இதன் மூலம் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

## வேலையாட்கள் தேவை

கோவில் கட்டட செதுக்கல்
வேலை தெரிந்த
மேசன்மார் தேவை.

(CS/59389) J-1

தொடர்பு:- **077 844 9707**

---

## கார் விற்பனைக்கு

Celerio 2025 மிகவும் அழகான, பாதுகாப்பம்சங்கள், ஆறு Air Bags, Multi Functional Steering, Push start இன்னும் பல, விலை 86 இலட்சம்

(CR 46046) E

தொடர்பு: **075 576 3141**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தெய்வீக இசையும் உதவி வழங்கலும்

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், தெய்வீக இசை அரங்கமும், உதவி வழங்கலும் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் ஆச்சிரம மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றன.
நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவன் க. கபிநாத் அணி செய் கலைஞர்களுடன் இணைந்து தெய்வீக இசைப்பாடல்களை வழங்கினார்.
இதேவேளை கோப்பாய்ப் பிரதேச செயலகத்தினின் கோரிக்கைக்கு அமைவாக முதியோர்களின் ஆன்மிக யாத்திரைக்காக 50 ஆயிரம் ரூபா நிதி சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் வழங்கப்பட்டது. (ச-25, 66)

### மியான்மரில்...

துள்ளது. மியான்மரின் மியாவாடி பகுதியில் இணையக் குற்றங்களுடன் தொடர்புடைய ஏராளமான முகாம்கள் இயங்கி வருகின்றன. சுற்றுலா விசாவில் மியான்மருக்குச் செல்லும் இலங்கையர்களையும், இந்தியர்களையும் அந்த முகாமை இயக்கிவரும் குற்றக் குழுக்கள் கடத்திச் சென்று, இணையக் குற்றங்களில் ஈடுபட வற்புறுத்துவது நீண்டகாலமாக இடம்பெற்று வருகின்றது.
அந்த முகாம்களிலேயே, தற்போது 13 இலங்கையர்கள் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. அவர்களை மீட்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.
இந்த முகாம்களில் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த பலர், கடந்த காலங்களில் மியன்மார் மற்றும் தாய்லாந்து அரசாங்கங்களின் உதவியுடன் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### சொகுசுக்...

பட்டுள்ளது. ஜனாதிபதிகளின் சிறப்புரிமை சட்டத்தின் படி, ஓய்வுபெற்ற ஜனாதிபதி உயிருடன் இல்லாதுவிடின் அவரின் மனைவிக்கு சில சிறப்புரிமைகள் வழங்கப்படும். அதனடிப்படையில், முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் மனைவி ஹேமா பிரேமதாஸவுக்குச் சொகுசுக்கார் வழங்கப்பட்டிருந்தது.
இந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதிகளின் விசேட சலுகைகளை நீக்கும் சட்டம் அண்மையில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, அந்த சொகுசுக்காரை ஹேமா பிரேமதாஸ மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைத்துள்ளார். (அ-ம)

### போர்...

மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார். அரச மாளிகையில் இருந்து வெளியேறி தங்காலை, கால்டன் இல்லத்தில் குடியேறியுள்ள மஹிந்த ராஜபக்ச, தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார். அந்த நேர்காணலிலேயே, தனது அரசியல் எதிர்காலம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். அவரிடம் கேட்கப்பட்ட சில கேள்விகளும், அவற்றுக்கு வழங்கப்பட்ட பதில்களும் வருமாறு,
கேள்வி போரை முடிப்பதற்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்கினீர்கள். நாட்டை அபிவிருத்தி செய்தீர்கள், மக்கள் ஆதரவையும் வென்றீர்கள். ஆனால் என்றாவது ஒருநாள் அரச வதிவிடத்தை இழந்து சொந்த ஊருக்கு வந்துவிடுவோம் என நினைத்துன்டா?
பதில் எனது பூர்வீக இல்லத்துக்கு வருவதைவிட வேறு என்ன மகிழ்ச்சி இருக்க முடியும்? உத்தியோகபூர்வ வதிவிடங்களில் இருந்தாலும் இங்கு இருப்பதையே விரும்புகின்றேன்.

**கேள்வி** - அப்படியானால் தற்போது மகிழ்ச்சியாகவா இருக்கின்றீர்கள்?
**பதில்** - ஆம்.

**கேள்வி** - பல பிரச்சினைகளுக்கு மத்தியில் எப்படி இவ்வாறு மகிழ்ச்சியாக இருக்க முடிகின்றது?
**பதில்** - அதுதான் எனது குணவியல்பு என நினைக்கின்றேன். நான் எதையும் பிரச்சினையாகக் கருதுவதில்லை.

**கேள்வி** - புதிய அரசின்கீழ் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு இப்படி நடக்கும் என நினைத்தீர்களா?
**பதில்** - அவ்வாறு நினைக்கவில்லை. இருந்தாலும் எதையும் எதிர்கொள்ளத் தயார்.

**கேள்வி** - இந்தத் தீர்மானம் (ஜனாதிபதிகளுக்குரிய சிறப்புரிமைகள் நீக்கம்) பற்றி உங்கள் கருத்து என்ன?
**பதில்** - அரசால் எடுக்கப்பட்டுள்ள முடிவு அவர்களுக்கு சரியெனப் படும். எமக்கு பிழையென்றே தெரிகின்றது.

**கேள்வி** - தேசிய மக்கள் சக்தி அரசு, ராஜபக்சக்களை பழிவாங்குகின்றது என்ற விமர்சனம் உள்ளது. இதனை நீங்கள் உணருகின்றீர்களா?
**பதில்** - ராஜபக்சக்கள் மட்டும் அல்ல தமக்கு அச்சுறுத்தலாக விளங்கும் அத்தனை பேரையும் பழிவாங்குகின்றனர்.

**கேள்வி** - எதிர்கால அரசியல் திட்டம் என்ன?
**பதில்** - அரசியல் பயணம் தொடரும்.

**கேள்வி** - நாட்டில் மீண்டும் மஹிந்த சூறாவளி வீசுமா?
**பதில்** - வீசும், நிச்சயம் வீசும். அது மஹிந்த சூறாவளியாகவும் இருக்கலாம். அல்லது வேறு சூறாவளியாகவும் இருக்கலாம்.

**கேள்வி** - பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததைப் பற்றி இன்று என்ன நினைக்கின்றீர்கள்?
**பதில்** - பயங்கரவாதத்தை முடிப்பதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்ததை ஓர் அதிர்ஷ்டமாகக் கருதுகின்றேன்.

**கேள்வி** - நாட்டுக்கு முன்னால் பல சவால்கள் உள்ளன. சர்வதேச தலையீடுகள் உள்ளன என்று சிலர் கூறுகின்றனரே...?
**பதில்** - இந்தச் சூழ்ச்சி எப்போதும் இருந்தது. அதற்கு அடிபணியாத ஆட்சியாளர்களே தேவை.

**கேள்வி** - உங்களுக்கு முன்னாள் இருந்த தலைவர்களால் போரை முடிக்க முடியாமல் போனது. உங்களால் அது எப்பச் சாத்தியமானது?
**பதில்** - சிறந்த பாதுகாப்புச் செயலாளர் ஒருவர் இருந்தார். முப்படைத்தளபதிகள் இருந்தனர். ஒரு சிறந்த குழுவின் கூட்டு முயற்சியின் பிரதிபலனாகவே அது அமைந்தது.

**கேள்வி** - எமது நாட்டில் மீண்டும் போர் ஏற்படக்கூடுமா?
**பதில்** - தற்போது போர் ஏற்படும் என நான் நினைக்கவில்லை. ஆனால் போர் ஏற்படாது என்று உறுதியாகக் கூறிவிட முடியாது. ஏனெனில் புலிகள் போருக்கு தயாராவார்கள் என நாம் எவரும் நினைக்கவில்லை.

**கேள்வி** - மூன்று வருடங்களில் போர் முடிக்கப்படும் என எவரும் நினைக்கவில்லைதானே?
**பதில்** - மூன்று வருடங்கள்கூட செல்லவில்லையே. (அ-ம-44)
தமிழில் ஆர்.சனத்

### சுதந்திரப்...

'நியூயோர்க் பிரகடனம்' என்று பெயரிடப்பட்ட இந்தத் தீர்மானத்துக்கு 142 நாடுகள் ஆதரவு வழங்கியுள்ளன. அவ்வாறு ஆதரவு வழங்கிய 142 நாடுகளில் இலங்கையும் ஒன்றாகப் பதிவாகியுள்ளது. நியூயோர்க் பிரகடனத்துக்கு எதிராக 10 நாடுகள் வாக்களித்த அதேநேரம், 12 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. இஸ்ரேல், அமெரிக்கா, ஆர்ஜென்டினா, ஹங்கேரி, மைக்ரோனேஷியா, நௌரு, பலாவ், பப்புவா நியூகினியா, பராகுவே மற்றும் டோங்கா ஆகிய பத்து நாடுகளுமே எதிராக வாக்களித்தன. (அ-ம-44)

### பயங்கரவாதத்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதென்பது அரசாங்கத்தின் தேர்தல் வாக்குறுதியாகும். அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் நாங்கள் முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும் நடவடிக்கைகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. இந்தப் பணிகள் கிட்டத்தட்ட நிறைவடைந்து, தற்போது சட்டவரைவை இறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த விவகாரத்தைக் கையாள்வதற்காக அமைக்கப்பட்ட குழு தற்போது மிகச்சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது - என்றார். (அ-ம-44)

### சுற்றுலாவிகளின்...

வருகின்றது. கடந்த 10 நாள்களில் 52 ஆயிரத்து 246 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். செப்ரெம்பர் மாதத்தின் முதல் 7 நாள்களில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில், அவர்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 300 என்பதாகக் காணப்படுகின்றது.
இதேவேளை, ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் 16 லட்சத்து 18 ஆயிரத்து 769 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் - என்றுள்ளது. (அ-ம)

### போர்க்...

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையில் இடம்பெற்ற போரின் போது போர்க் குற்றங்கள் என எவையும் இடம்பெறவில்லை. ஆனால், போரில் நிகழக்கூடாத சில விடயங்கள் நடந்திருக்கலாம். போரின்போது தவிர்க்க முடியாத நிலைமை கருதி ஏற்படும் அந்த விடயங்கள் ஒருபோதும் போர்க் குற்றம் என்ற வரையறைக்குள் வராது. அவ்வாறான விடயங்களை அல்லது அவ்வாறான சம்பவங்களைக் கருத்திற்கொண்டு இராணுவம் போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாகக் கூறிக்கொள்ள முடியாது.
கடந்த 11 மாதங்களாக எங்கள் அரசாங்கம் சமரசத்தையும் இன நல்லிணக்கத்தையும் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்கும் பாடுபட்டுள்ளது. சட்டத்தையும் ஒழுங்கையும் மேம்படுத்தும் வகையில் அமைந்த எங்களின் முடிவுகள் பல நல்ல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன - என்றார். (அ-ம)

### எம்.பி.க்களின்...

இது தொடர்பில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய தேசிய வரி வருமானத் திணைக்களம், மதுவரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம் உள்ளிட்டவை தமக்கான இலக்குகளுக்கு அப்பால் இலாபமீட்டியுள்ளன. மறுபுறம் அநாவசிச் செலவுகளைக் குறைத்திருக்கின்றோம். இவற்றின் ஊடாக வரவு - செலவுத் திட்டத்தின் இடைவெளியை படிப்படியாக சமநிலைப்படுத்த முயற்சிக்கின்றோம்.
உலகின் பல நாடுகள் பொருளாதார வளர்ச்சியைக் காண்பிக்கத் தவறியுள்ள போதிலும், இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருகின்றது என்று உலக வங்கி பாராட்டுத் தெரிவித்துள்ளது. 2021, 2022, 2023ஆம் ஆண்டுகளில் திவாலடைந்திருந்த நாடு இன்று இந்த நிலைமையை அடைந்துள்ளது. வருமானம் அதிகரிக்கப்பட்டு செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன.
அத்துடன், கடந்த காலங்களில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கமைய ஜனாதிபதிகளுக்குரிய சிறப்புரிமைகளை நீக்குவதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றக் கூடிய சட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியினர் இதற்கு வாக்களித்திருக்க முடியும். ஆனால் அவர்கள் அதனைச் செய்யவில்லை. மாறாக இந்த விடயத்தை மறைப்பதற்காக மறுநாள் சபையில் வேறொரு விடயத்துக்காக கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.
மிக விரைவில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை நிறுத்துவதற்கான சட்டமும் நிறைவேற்றப்படும். அதற்கான சட்ட வரைவு தயாரிக்கப்பட்டு வருகிறது - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகிச்சை வசதிகளை மேம்படுத்தும் வல்வெட்டித்துறை மருத்துவமனை

**யாழ்ப்பாணம், செப்.14**

**வல்வெட்டித்துறைப் பிரதேச மருத்துவமனையில், நடைமுறையிலுள்ள சிகிச்சை வசதிகளை மேலும் மேம்படுத்தி, நோயாளர்களின் மருத்துவத் தேவைகளை இலகுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

குறித்த மருத்துவமனையில், விசேட மருத்துவ நிபுணரின் சிகிச்சையை, மாதத்தில் இருமுறை நடத்துவதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. இவரிடம் ஆலோசனை மற்றும் சிகிச்சை பெறுவோர் மருத்துவமனையைத் தொடர்புகொள்ளமுடியும். அதே வேளை, வல்வெட்டித்துறை மற்றும் அயற்பிரதேசங்களில் கர்ப்பிணிகளுக்கு சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்கும் நோக்கில், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் இருந்து மகப்பேற்று மற்றும் பெண் நோயியல் மருத்துவ நிபுணர் மாதத்தில் ஒரு தடவை, வல்வெட்டித்துறைப் பிரதேச மருத்துவமனைக்கு வருகைதந்து உரிய சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்கிவருகின்றார்.

வல்வெட்டித்துறை மற்றும் அதனைச் சூழ உள்ள பிரதேசங்களைச் சேர்ந்த கர்ப்பிணிகள், பொதுமக்கள் சிகிச்சை மற்றும் ஆலாசனைகளுக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனை உள்ளிட்ட ஏனைய இடங்களுக்குத் தொலைதூரம் பயணிப்பதை அவதானிக்கமுடிந்துள் ளது. இதனையடுத்து அங்குள்ள சமூக ஆர்வலர்கள் மற்றும் நோயாளர் அபிவிருத்திச் சங்கத்தினர் இணைந்து இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (க-100)



# நோய்வாய்ப்பட்ட யானை கிளிநொச்சியில் உயிரிழப்பு

கிளிநொச்சி, செப்.14

நோய்வாய்ப்பட்டநிலையில் கிளிநொச்சி உருத்திரபுரம் நீவில் குளத்தில் காணப்பட்ட யானை நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளது. உயிரிழந்த யானையை வடக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான வனஜீவராசிகள் திணைக்கள மருத்துவர் பரிசோதனைக்குட்படுத்தினார். குறித்த யானை பன்றிக்கு வைக்கும் வெங்காய வெடியில் அகப்பட்டு காயங்களுக்குள்ளானது. அண்மைய நாள்களாக குறித்த யானை நோய்வாய்ப்பட்டிருந்தநிலையில் உயிரிழந்துள்ளது. (ச-113)

# காற்றாலைத் திட்டதுக்கு எதிராக முல்லையிலிருந்து நடைபயணம்

மன்னார், செப்.14

மன்னாரில் காற்றாலை அமைப்பதற்கு எதிரான போராட்டத்துக்கு ஆதரவாக முல்லைத்தீவு இளைஞர்கள் இருவர் மன்னார் நோக்கி நடைபயணத்தை ஆரம்பித்திருந்தனர் அவர்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மன்னாரைச் சென்றடைந்தனர். முல்லைத்தீவு முள்ளிவாய்க்கா லில் இருந்து கடந்த புதன்கிழமை நடைபயணத்தை ஆரம்பித்த அவர்கள் வீதி ஓரங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் வீதியில் பயணித்த பொதுமக்களுக்கு துண்டுபிரசுரங்களை வழங்கி நடைபயணத்தை முன்னெடுத் தனர்.

மன்னார்ப் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார் மற்றும் மன்னார் நகரில் போராட்டத்தை முன்னெடுத்துவரும் மக்கள் ஒன்றிணைந்து நடைபயணம் மேற்கொண்ட இளைஞர்களை வரவேற்றனர். (ச-25.56)

## கனரக வாகனம் விற்பனைக்கு

Isuzu Lo-7*** எனும் இலக்கமுடைய Isuzu 350 வகை லொறி விற்பனைக்கு உண்டு

(CS 59405) E

தொடர்புகளுக்கு:
077 120 8481

## அவசர தேவை

சிறுநீரகம் பாதிப்படைந்த நபர் ஒருவருக்கு அவசரமாக O வகையான சிறுநீரகம் தேவைப்படுகின்றது.
வயதெல்லை 30 - 50

(CS 59397) E

தொடர்பு: 076 476 7400

## மணல் விற்பனைக்கு

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு.

- தென்மராட்சி 45,000
- யாழ்மாவட்டம் 50,000
- வடமராட்சி 50,000

விநியோகிக்கப்படும். மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ் மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும்.

(CS 59405)E

தொடர்புகளுக்கு:
076 324 9977

## வாடகைக்குத் தேவை

4 பேர் கொண்ட குடும்பத்திற்கு, கொழும்பு 13 இல் உடனடி குடியிருப்புக்காக 3 படுக்கையறைகள் கொண்ட unfurnished Apartment தேவை,
Expo Grand அல்லது இதே போன்ற Apartment Complexes. வாடகைக்கு விட ஏதேனும் units இருந்தால் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்,

(CS/59380) J-1

ரவி : 077 442 3800

## காணி விற்பனைக்கு

மீசாலையில் 20 பரப்பு காணி விற்பனைக்கு

தொடர்பு: 077 794 8012

## பண்ணை வேலைக்கு ஆட்கள் தேவை

- பண்ணையிற் தங்கி நின்று வேலைசெய்யவேண்டியதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்.
- அடிப்படைச் சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக சுமார் 55 000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாக இருக்கும்
- அதேநேரம் EPF & ETF முழுவதும் எம்மால் கட்டப்படும்.
- மூன்று நேர உணவும் நிறுவனத்தால் வழங்கப்படும்.

இடம்: புங்குடுதீவு, யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு 076 564 3193

(CS 59401) E

## Groom Wanted

Singaporean Ceylonese Hindu Vellalar Female Graduate, Seeks suitable partner, 32 - 35 years old, willing to settle in singapore.
**Please contact:**
+65 9834 0600 (WhatsApp)

(CS 59383) E

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள வீடொன்றுக்கு வீட்டு வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.

தொடர்பு:- 077 191 9859

## பணிப்பெண் தேவை

சிங்கப்பூரில் 25 - 35 வயதிற்குட்பட்ட அனுபவமுள்ள பணிப்பெண் தேவை.

Whatsapp: +65 983 40600

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உயரப்புலம், ஆனைக்கோட்டை குளப்பிட்டி வீதி, பாரதி சனசமூக நிலைய முன்வீதியின் வலது புறத்தில் முதலாவது வீட்டுடன் 06 பரப்பு (நிலப்பரப்பு) காணியும் உடன் விற்பனைக்கு உண்டு

(CS 59382) E

தொடர்பு : (WhatsApp) +94 770 460 604

## வேலையாட்கள் தேவை

கொக்குவில், தாவடியில் இயங்கிவரும் பிரபல்யமான அரிசி ஆலை ஒன்றிற்கு பொதியிடல் பணிக்கு பெண் வேலையாட்கள் தேவை.
சம்பளம் - 35000/-

(CS/59391) J-1

தொடர்பு:- 077 787 0953

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் மாநகர எல்லைக்குள் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட 07 அறைகளுக்கு குறையாத இணைந்த குளியல் அறைகளுடன் வீடு வாடகைக்குத் தேவை

(CS 59386) E

071 130 1294, 076 660 6970

## காணி உடனடி விற்பனைக்கு

யாழ் இராமநாதன் வீதியில் பல்கலைக்கழகத்திற்கு அருகில் அமைதியான சூழலில் 1 1/4 பரப்பு சுற்று மதில், குழாய்கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு. வீடு, விடுதி கட்டுவதற்கு உகந்தது. தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.

(CS 59395) E

தொடர்பு: 077 723 5740

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி தென்னியம் தோட்டம் அல்வாய் கிழக்கில் வீட்டுடன் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
(பகுதியாகவும் கொடுக்கப்படும்)

077 601 1135, 021 205 3988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்தின் Jaffna , Wellawatte கிளைக்கு
Accounts Clerk. Office Clerk மற்றும்
மேற்பார்வையாளர்களுக்கான வேலைவாய்ப்பு
O/L மற்றும் A/L, Accounts Intern. Microsoft Excel
தெரிந்திருக்க வேண்டும். வயதெல்லை 20-50

தொடர்புகளுக்கு: 0776431366

## காணி விற்பனைக்கு

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு முன் உள்ள பொற்பதி வீதியில் 4 1/2 பரப்புக் காணி வீதி முகப்புடன் சேர்ந்த நிலையில் நல்ல தண்ணி கிணறு, இருபக்க பாதையுடன் விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 075 945 3391

(CS 59978) E

## வாடகைக்கு

யாழ் வைத்தியசாலைக்கும் Keells இற்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள மாடிக்கட்டடம் வாடகைக்கு உண்டு.
(அலுவலகங்கள், IT Company-கள் நடாத்துவதற்கு உகந்த இடம்)

தொடர்பு: 077 515 5662

## வேலையாட்கள் தேவை

யாழ். மானிப்பாயில் இயங்கிவரும் குளிர்பானக் கடைக்கு குளிர்பானம் தயாரிப்பதில் அனுபவம் உள்ள ஆண் வேலைக்குத் தேவை.
வேலை நேரம் பி.ப. 3.00 - நள்ளிரவு 12.00

தொடர்பு:- 077 785 3165

(CS/59366) J-1

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள J.B நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை

- ➤ மேசன்
- ➤ கூலி

தங்குமிட வசதி வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
075 532 7993, 077 113 8615

(CS/59353) E

## விற்பனைக்கு

இரண்டு குழி போட்ட சிங்
(பெறுமதி வாய்ந்தது, வியாபார நோக்கத்திற்காக பயன்படுத்தலாம்)

தொடர்பு: 075 410 2905
076 406 2905

(CS/59343) E

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ் கோப்பாய் ராசபாதை வீதியில், ரெக்னிக்கல் கொலிச்சிற்கு முன்பாக 24 பரப்பு காணி 20 அடி பாதையுடன் இரண்டு இரண்டு பரப்பாக பிரித்து விற்பனைக்கு உண்டு.

- குடியிருப்பு சூழல்
- நல்ல நீர்க் கிணறு
- செம்மண் தரைக்காணி
- பிரதான போக்குவரத்து சேவை பஸ் செல்லும் வீதி முன்பாக.

பார்வையிடும் நேரம்:- காலை 6.00 - மாலை 6.00 வரை

தொடர்புகளுக்கு:-
076 755 8606, 074 338 4481, 077 638 5683

## வேலைவாய்ப்பு

சுன்னாகத்தில் அமைந்துள்ள
வர்த்தக நிலையத்திற்கு
(Computer Billing)
செய்யக்கூடியவர்கள் / பழக விரும்புவர்கள் தேவை.
தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
ஆண்கள் மட்டும்.

தகைமைகள் :
அடிப்படை கணினி அறிவு அவசியம்.
வயதெல்லை : 20 - 30 வயதுவரை

தொடர்புகளுக்கு:-
070 401 6775

(CS/59352) J-1

**சீனாவுக்கு கூடுதலான வரிகள்!**

சீனாவுக்கு நேட்டோ நாடுகள் 100 வீதம் வரி விதிக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார். (ம)

Melanka

இலங்கையில் மிக குறைந்த விலையில்

MEGA Sale

இலங்கையின் மிகப்பெரிய காலணி கண்காட்சி

பாதணிகள்
உள்ளூர் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பாதணிகள்
பெண்கள் காலணிகள்
ஆண்கள் காலணிகள்
குழந்தைகள் காலணிகள்
பள்ளிக்கூட காலணிகள்

பைகள்
பெண்களுக்கான கை பைகள்
பள்ளிக்கூட பைகள்

பாதணிகள்
பைகள்

செப்டம்பர்
05 முதல் | 23 வரை

யாழ்ப்பாணம்
வீரசிங்கம் மண்டபம்
✆076 148 7000

## காணிகள் தேவை

யாழ் மாவட்டத்தில் காணிகள், வீடுகள் தேவை. யாழ்ப்பாண மாவட்டத்தில் எந்த பிரதேசத்தில் இருந்தாலும் 10 பரப்புக்கு மேற்பட்ட நிலப்பரப்புக் காணிகள், வீடுகள் தேவை. ஆவணங்கள் சரிபார்க்கப்பட்ட பின்னர் உடனடியாக வாங்கப்படும். காணி உரிமையாளர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
ஜெயம்

சதீஸ் - 077 986 5457
ராஜா - 077 241 7589
ஜெயம் - 077 805 1655

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.09. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 ஆவணி 29 ஞாயிற்றுக்கிழமை (14.09.2025) சிகரம் :156

செத்தபிணம் செல்லையாவும் சேர்த்துவைத்த காசுகளும்
பத்து ஏக்கர் தென்னைகளும் பாடையிலே- கத்தினரே
பிள்ளைகளும் போட்டிக்கு போட்டனரே ஒப்பாரி
வெள்ளைவிரல் மோதிரத்தைக் கண்டு

பொன்.சுகந்தன்

# செம்மணியிலிருந்து ஜெனிவாவுக்கு: நிஷ்டையில் இருக்கும் புத்தரும் நிஷ்டையில் இருக்காத எலும்புக்கூடும்

○ நிலாந்தன்

இலங்கைத் தீவு தேரவாத பௌத்தத்தின் சேமிப்பிடம் என்று கருதப்படுகிறது. இந்தச் சிறுதீவில் பரவலாக புத்தர் சிலைகளை வெவ்வேறு நிலைகளில் காணலாம். இருக்கின்ற, நிற்கின்ற, நிஷ்டையில் இருக்கின்ற,உறங்குகின்ற புத்தர் சிலைகள். இவ்வாறு நிஷ்டையில் இருக்கின்ற புத்தருடைய சிலைகளை வழிபடும் ஒரு நாட்டில் நிஷ்டையில் இருப்பது போன்ற தோற்றத்தைக் கொண்ட ஓர் எலும்புக்கூடு அண்மையில் செம்மணியில் அகழ்ந்தெடுக்கப்பட்டது. அந்த எலும்புக் கூட்டோடு காணப்பட்ட ஏனைய எலும்புக்கூடுகளில் இருந்து அதன் தலை சற்றுத் தூக்கலாக மேலே தெரிந்தது என்றும் அதன் வாய் வழமைக்கு மாறாக கெழித்துப்போய்க் காணப்பட்டது என்றும் ஊடகவியலாளர்கள் கூறுகிறார்கள். அந்த எலும்புக்கூடு நிஷ்டையில் இருப்பதுபோன்ற ஒரு தோற்றத்தை தருவதனால் அதற்கு ஏதும் மத அல்லது ஆன்மிகப் பரிமாணம் இருக்கக் கூடுமா என்று சட்ட மருத்துவ அதிகாரி சந்தேகித்த காரணத்தால், யாழ்.பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறையைச் சேர்ந்த விரிவுரையாளர் ஒருவர் செம்மணிக்கு அழைக்கப்பட்டார். அந்த எலும்புக்கூட்டுக்கு ஆன்மிகப் பரிமாணம் எதுவும் இல்லை என்று கூறப்படுகிறது.



தேரவாத பௌத்தத்தின் ஒரே சேமிப்பிடம் என்று கூறிக்கொள்ளும் ஒரு நாட்டில் ஒரு புதைகுழிக்குள் அப்படி ஓர் எலும்புக்கூடு. இந்தச்சிறிய தீவை ஆட்சிசெய்த சிங்கள பௌத்த ஆட்சியாளர்கள் மெய்யாகவே புத்த பகவானின் உபதேசங்களைப் பின்பற்றி நடந்திருந்தால் அப்படி எலும்புக்கூட்டை வைத்து ஆராய்ச்சி செய்யவேண்டி வந்திருக்காது.

அந்த எலும்புக்கூடு அகழ்ந்து எடுக்கப்பட்ட கொஞ்ச நாள்களுக்குப் பின்,செம்மணிப் புதைகுழியிலிருந்து நடந்து போகும் தூரத்தில்,செம்மணி வளைவில், கடந்த ஏழாந் திகதி கிருசாந்தி நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டது. அங்கே செம்மணி தொடர்பாக வெளிவந்த கவிதைகளின் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வில் கிருசாந்தியோடு கொன்று புதைக்கப்பட்ட அவருடைய சகோதரர் பிரணவனின் நண்பர் ஒருவர் உரையாற்றினார். அவர் கிருசாந்தியின் தாயாருடைய இளைய சகோதரியின் மகளுடைய கணவர். கொல்லப்பட்ட பிரணவனின் வயதுக்காரராகிய அவர் தனது உரையில் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

கிருசாந்தியின் மூத்த சகோதரி இப்பொழுது புலம்பெயர்ந்து வாழ்கிறார். தனது குடும்பத்தவர்கள் சம்பந்தப்பட்ட நினைவு நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்கு அவர் தயாரில்லை என்று கூறப்படுகிறது. 29 ஆண்டுகளுக்கு முன்பு தனது குடும்பத்துக்கு நடந்த கொடுமையை இரைமீட்டக் கூடிய நிகழ்வுகளில் கலந்து கொள்வதை அவர் விரும்பவில்லையாம். ஊருக்கு வந்து தாங்கள் வாழ்ந்த வீட்டைப் பார்ப்பதற்கோ தன் குடும்பத்துக்கு நடந்த கொடுமை தொடர்பாக யாரோடும் உரையாடுவதற்கோ அவர் தயாரில்லை என்றும் அங்கே கூறப்பட்டது. 29 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த கொடுமையை நினைவுகூர்வதன் மூலம் அவர் தன் மனநிம்மதியை இழக்கலாம் என்று அஞ்சுவதாகவும் , அவர் அந்தக் கொடுமையான நினைவுகளில் இருந்து இன்னும் விடுபடாதவராகக் காணப்படுவதாகவும் இந்தநாடு தான் வாழ்வதற்குப் பாதுகாப்பான ஓரிடம் அல்ல என்று கருதி அவர் நாட்டை விட்டு வெளியேறி விட்டதாகவும், மீண்டும் இந்த நாட்டுக்குள் வர அவர் விரும்பவில்லையென்றும் அவருடைய உறவினர் செம்மணி வளைவில் உரையாற்றும்போது கூறினார்.

கிருசாந்தி கொல்லப்பட்டு 29 ஆண்டுகளின் பின் அவருடைய சகோதரியின் மனோநிலை அவ்வாறு காணப்படுகிறது. கிருசாந்தியின் நினைவு நாளுக்கு அடுத்த நாள் அதாவது எட்டாம் திகதி ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அறுபதாவது கூட்டத்தொடர் தொடங்கியது. இந்தக் கூட்டத்தொடர் ஒக்ரோபர் மாதம் 08 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக அமைச்சர் விஜித ஹேரத் விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார்.

இந்த 60ஆவது கூட்டத்தொடர் இலங்கைக்கு மிகவும் முக்கியமான ஒன்றாக இருக்கும் என்று இலங்கையின் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளரான சட்டத்தரணி பிரதிபா மஹாநாம ஹேவா கூறியுள்ளார். அண்மையில் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். அதன்பின் நிகழும் இந்த ஐ.நா. கூட்டத்தொடரில் அவர் வாசித்தளித்த அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது..'பல தசாப்தங்களாக ஆதிக்கம் செலுத்தி வந்த வன்முறை மற்றும் தண்டனையின்மை சுழற்சிகளிலிருந்து மீள்வதற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பை இலங்கை தற்போது பெற்றுள்ளது'. இந்த அறிக்கைக்கு இலங்கை அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ பதில் பின்வருமாறு அமைகிறது.

"வெளிப்புறத் தலையீடுகள், தேசிய ரீதியான முயற்சிகளைத் தடுக்கவும் மக்களைத் துருவப்படுத்தவும் மட்டுமே உதவும் என்று இலங்கை அவதானித்துள்ளது. எனவே, சர்வதேச நடவடிக்கை தொடர்பாக அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள முடிவுகள் மற்றும் பரிந்துரைகளுடன் இலங்கை அரசாங்கம் உடன்படவில்லை.,…

இனம், மதம், வர்க்கம் மற்றும் சாதி அடிப்படையில் எந்தப் பிரிவினையோ அல்லது பாகுபாடோ இல்லாமல் அதன் மக்களின் பன்முகத்தன்மையை மதிக்கும் மற்றும் அனுபவிக்கும் ஒரு நாட்டை நோக்கிச் செயற்படுவதற்கான ஆணையை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், அந்த நோக்கத்துக்காக அரசாங்கம் வலுவாகவும் உண்மையாகவும் உறுதிபூண்டுள்ளது…..

இலங்கையில் இனவெறி அல்லது தீவிரவாதம் மீண்டும் எழுவதைத் தடுப்பது அரசாங்கத்தின் முழுமையான உறுதிப்பாடாகும். எனவே,இலங்கை ஓர் உள்நாட்டுப் பொறிமுறை மூலம் முன்னேறும்போது, சர்வதேச சமூகத்தின் புரிதல் மற்றும் ஆதரவை இலங்கை வரவேற்கின்றது"…..இதுதான் அந்தப் பதிலின் சாராம்சம். இலங்கை அரசாங்கத்தின் மேற்கண்ட உத்தியோக பூர்வ பதிலின்படி, வெளிநாட்டு விசாரணையானது நாட்டைத் துருவமயப்படுத்த உதவும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் நாடு ஏற்கனவே துருவமயப்பட்டுத்தான் உள்ளது. உள்நாட்டு விசாரணையில் நம்பிக்கை இழந்த காரணத்தால்தான் தமிழ் மக்கள் வெளிநாட்டு விசாரணையைக் கேட்கின்றார்கள். குறிப்பாக கிருசாந்தி தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடைய அறிக்கையில் இருந்த ஒரு விடயத்தை இங்கு சுட்டிக்காட்டலாம். இலங்கைத் தீவின் வரலாற்றில் கடந்த மூன்று தசாப்த காலத்துக்குள் பாலியல் வன்முறை தொடர்பாக நீதிமன்ற விசாரணைகளின் பின் தண்டனை வழங்கப்பட்ட ஒரு வழக்காக அது குறிப்பிடப்படுகிறது. அப்பொழுது ஜனாதிபதியாக இருந்த திருமதி சந்திரிகா தன்னைப் போரால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணாகவும் போரினால் பாதிக்கப்பட்ட எல்லோருடைய பிரதிநிதியாகவும் தன்னை முன்னிறுத்தி ஆட்சிக்கு வந்தார். இப்போது உள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைப் போலவே அப்பொழுதும் சந்திரிகா ஆட்சிக்கு வந்த பொழுது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பகுதியினர் அவரை ஆர்வத்தோடும் எதிர்பார்ப்போடும் பார்த்தார்கள். அந்த ஆர்வம்,எதிர்பார்ப்புக் காரணமாக தமிழ்ப் பகுதிகளில் சந்திரிக்கா சீலை, சந்திரிகா காப்பு என்று சந்திரிகாவின் பேரில் பொருட்கள் விற்கப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதி என்ற தன்னுடைய இமேஜைப் பாதுகாப்பதற்காக சந்திரிகா கிருசாந்தியின் வழக்கை அரசியல் தலையீடின்றி முன்னெடுக்க அனுமதித்தார். அதேசமயம் கிருசாந்தி யாழ்ப்பாணத்தின் படித்த ஆங்கிலம் பேசும் நடுத்தர வர்க்கக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் கல்வி கற்றது யாழ்ப்பாணத்தின் முன்னணி புரட்டஸ்தாந்து மகளிர் பள்ளிக்கூடத்தில். சமூகப் பலம்மிக்க அவருடைய உறவினர்களும் அவருக்குத் தெரிந்தவர்களும் சம்பந்தப்பட்ட சட்டச் செயற்பாட்டாளர்களும் துணிந்து நீதிக்காகப் போராடினார்கள். அதன் விளைவாக குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டார்கள். எனினும் தப்பிச்சென்ற ஒரு குற்றவாளி இன்றுவரை தலைமறைவாக உள்ளார்.

இவ்வாறு சந்திரிகா, கிருசாந்தியின் வழக்கில் தனது நீதியை நிரூபிக்க முற்பட்டு அதன் விளைவாக கிணறு வெட்டப் பூதம் கிளம்பியதுபோல அந்த வழக்கில் தண்டிக்கப்பட்ட சோமரட்ன ராஜபக்ச என்ற ஓர் இராணுவ லான்ஸ் கோப்ரல் தனது மேலதிகாரிகளுக்கு எதிராக வாக்குமூலம் வழங்கினார். அந்த வாக்குமூலம் தான் செம்மணி மனிதப் புதைகுழியை வெளியே கொண்டு வந்தது. இப்பொழுதும் அவர் தன் மனைவியூடாக உண்மைகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். அதில் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற விசுவாசமான விருப்பம் இருக்கிறதா? அல்லது தன்னைப் பலியாடாக்கிய உயரதிகாரிகளைப் பழிவாங்கவேண்டும் என்ற விருப்பம் இருக்கிறதா?

ஓர் இராணுவ லான்ஸ் கோப்ரல் இவ்வாறு வெளிப்படுத்தல்களைச் செய்வது சிறீலங்காவில் இதுதான் முதற்தடவை. அவர் வெளிப்படுத்தும் உண்மைகளை உள்நாட்டு நீதியின் மூலம் விசாரித்து, அவர் குறிப்பிடும் படை அதிகாரிகளை நீதியின் முன் நிறுத்தித் தண்டிப்பதற்கு அநுர அரசாங்கம் தயாராக இருக்கிறதா? அல்லது இந்த நாட்டில் இரண்டு நீதிகள் உண்டு என்ற அதே பழைய கசப்பான அனுபவம்தான் தமிழ் மக்களுக்கு மீண்டும் ஒரு தடவை கிடைக்கப்போகிறதா ? சந்திரிகா ஆட்சிக்கு வந்த போது அவருடைய பெயரில் சேலை விற்றவர்கள், காப்பு விற்றவர்களைப் போலவே இப்பொழுது அநுரவின் காலத்தில் அவரை மாற்றத்தின் குறியீடாகக் காட்டும் தமிழர்கள் உள்ளனர். அதிலும் யாழ். பல்கலைக்கழகத்தின் அறிவுஜீவிகள் உள்ளனர். இவர்கள் அனைவரும் அரசாங்கம் மனித உரிமைகள் ஆணையகத்துக்கு வழங்கிய பதிலில் கூறப்படுவதுபோல உள்நாட்டு நீதியானது இனங்களைத் துருவமயப்படுத்தாது என்பதனை நிரூபிப்பதற்காக உழைப்பார்களா? ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
14 செப்ரெம்பர் 2025



# மண்டைதீவில் சர்வதேச விளையாட்டு மைதானம்;

## சாத்தியக்கூற்று மற்றும் சுற்றுப்புறச் சூழல் அறிக்கைகள் எதுவும் இல்லாத அரசியல் நிகழ்ச்சிநிரல்




○ அ.நிக்ஸன்

யாழ்ப்பாணம் மண்டைதீவுப் பிரதேசத்தில் சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு மைதானம் ஒன்றை அமைப்பதற்கு அநுர அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ள பின்னணியில், யாழ்ப்பாணத்தின் தீவுப் பிரதேசங்கள் பற்றிய கரிசனை குறிப்பாக அங்கு வாழும் மக்களின் அடிப்படைவசதிகள், தொழில் முயற்சிகளில் கவனம் செலுத்தப்பட்டதா என்பது தொடர்பான சந்தேகங்கள் எழுகின்றன.

சாத்தியக்கூற்று அறிக்கைகள் (Feasibility Report) சுற்றுப்புறச் சூழல் அறிக்கைகள் (Environmental Report) எதுவும் இன்றி வடக்கு - கிழக்கில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 2009 க்குப் பின்னர் 'தமிழ் மக்களுக்கு நாங்கள் அனைத்தையும் செய்கிறோம்' என்பதை உலகிற்குக் காண்பிக்கும் நோக்கில் மாத்திரமே அபிவிருத்தி என்ற மாயை உருவெடுத்திருக்கிறது. மாறாக நூறு வருடங்களுக்கு மேற்பட்ட அரசியல் போராட்டம் ஒன்றை நடத்திவரும் ஈழத்தமிழ்ச் சமூகம், தனது அரசியல் விடுதலை விவகாரத்தில் பொருத்தமான தீர்வு கிடைக்காத ஒரு பின்னணியில் அபிவிருத்தித்திட்டங்களை எவ்வாறு எதிர்கொள்வது என்ற கேள்விகளுக்கு சிங்களத் தலைவர்களிடம் இருந்து பதில் இல்லை.

வடக்கு - கிழக்கில் சிங்கள மயமாக்கல் நகர்வுகள் மிக நுட்பமாக முன்னெடுக்கப்பட்டுவரும் சூழலில், அபிவிருத்தி என்ற போர்வையில் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறாது என்பதற்கு எந்தவொரு உத்தரவாதமும் இல்லை. அபிவிருத்தி செய்தால் அரசியல் தீர்வு அவசியம் இல்லை என்ற தவறான கற்பிதம் ஒன்றை இலங்கை ஒற்றையாட்சி அரசு அன்று முதல் நுட்பமாகக் கட்டமைத்துள்ளது. 1949 ஆம் ஆண்டு கிழக்கில் கல்லோயா குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அங்கு சிங்கள மக்களுக்கு முதலிடம் வழங்கப்பட்ட ஒரு பின்னணியில்தான், 1956 ஆம் ஆண்டு கல்லோயா இன அழிப்பு மோதல் ஏற்பட்டது. இந்தப் பின்புலத்தில்தான், 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர் 1949 ஆம் ஆண்டு கல்லோயா குடியேற்றத் திட்டம் போன்றொரு அபிவிருத்திகளை வடக்கு - கிழக்கில் அவதானிக்க முடிகிறது.

இதற்கு சந்திரிகா, மகிந்த, மைத்திரி- ரணில் மற்றும் கோத்தாபய என்று தொடர்ச்சியாக உற்று நோக்கினால், அபிவிருத்தி என்ற போர்வையில் இந்த நுட்பங்களை அவதானிக்க முடியும். அதே நேரம் அரசியல் நோக்கிலும் ஆட்சி செய்யும் கட்சிகள் தமது செல்வாக்கை தமிழ் மக்களிடம் வேரூன்றச் செய்து, தமிழ்த் தேசியக் கட்சிகளை பின்தள்ளும் நோக்கில் வடக்கு - கிழக்கில் பெரும் ஆடம்பரமாக ஆரம்பிக்கப்படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பின்னர் கைவிடப்பட்ட சம்பவங்களும் உள்ளன.

உதாரணமாக மண்டைதீவில் சர்வதேச விளையாட்டு மைதானம் அமைக்கப்படும் எனப் பரப்புரை செய்யப்பட்டு அடிக்கல்லும் நாட்டப்பட்டுள்ளது. ஆனால் 2015 ஆம் ஆண்டு மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் யாழ்.மண்டைதீவில் ஆரம்பிக்கப்பட்ட சுற்றுலா மையத்தின் செயற்பாடுகள் உரியமுறையில் செய்யப் படவில்லை பராமரிக்கப்படவுமில்லை. யாழ். மாவட்டச் செயலகம் ஊடாக ஜனாதிபதி செயலகம் முன்னெடுத்த நடவடிக்கை பொருத்தமானதாக அமையவில்லை.

சுமார் 8 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் யாழ்.மாவட்டச் செயலகத்தால் மண்டதீவு சுற்றுலா மையத்தின் வேலை திட்டத்துக்கான நிதி விடுவிப்பு செய்யப்பட்டது. குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வேலணைப் பிரதேச செயலகம் மற்றும் வேலணைப் பிரதேசசபை ஆகியன இணைந்து மண்டைதீவு சுற்றுலா மையத்தின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்த நிலையில், குறித்த திட்டம் பொருத்தமான முறையில் முடிவுறுத்தப்படவில்லை. எந்தவிதமான ஆய்வுகளும் செய்யப்படாமல் அரசியல் நோக்கில் அப்போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன இந்தத்திட்டத்துக்குரிய பெயர்ப்பலகையை நாட்டினார்.

திட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட கடற்பிரதேசம் ஆழம் குறைந்த கடற்பகுதியில் காணப்படும் நிலையில் படகுச் சவாரிகளை மேற்கொள்ள, குறித்த கடற்பிரதேசத்தை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்ற கேள்விகள், திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர்தான் எழுந்தன. ஆகவே சுற்றுலா அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பிக்க முன்னர் இது பற்றிய சாத்தியக்கூற்று ஆய்வுகள் மற்றும் சுற்றுப்புறச் சூழல் ஆய்வுகள் செய்திருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு எந்தவொரு ஆய்வுகளும் இல்லாமல் அரசியல் நோக்கில் எடுத்த எடுப்பில் கொழும்பு அரசியல் நிர்வாகம் தமிழ் மக்களை தம் வசப்படுத்த வேண்டுமென்ற ஒரே ஒரு நோக்கில் வடமாகாண அதிகாரிகளைத் தனக்கேற்றவகையில் நன்கு பயன்படுத்தியிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் ஏனைய தீவுப் பகுதிகளான சாட்டி, காரைநகர் கடற்கரைகள் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வந்து செல்லும் பகுதியாக அடையாளம் காணப்பட்டிருந்த ஒரு நிலையில், ஏன் குறித்த திட்டத்தை மண்டைதீவில் செயற்படுத்தினார்கள் என்ற நியாயமான கேள்விகளுக்கு கொழும்பு அரசியல் நிர்வாகத்தினால் இன்றுவரை பதிலளிக்க முடியவில்லை.

ஆகவே கொழும்பு மைய சிங்கள அரசியற் கட்சிகளுக்கு குடை பிடிக்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் உள்ள அதன் தமிழ் முகவர்கள் முன் யோசனைகள் எதுவுமின்றி பெயர்ப்பலகையை நாட்டுவது, அடிக்கல் நாட்டுவது போன்ற நிகழ்வுகளைப் பெரும் பரப்புரையாகக் காண்பித்து வாக்கு அரசியலில் ஈடுபடுகின்றனர் என்பது மாத்திரம் இங்கே பகிரங்கமாக தெரிகிறது. மக்களின் வரிப்பணத்தில் அமைச்சினால் ஒதுக்கப்பட்ட சுமார் 8 கோடி ரூபா செலவு செய்யப்பட்டதாகக் கூறப்படும் மண்டதீவு சுற்றுலா மையம் தற்போது உரிய முறையில் செயற்படுத்தப்படாமல் கவனிப்பாரற்று உள்ளமை அரசியல் வேடிக்கையே.

இவ்வாறு பல குற்றச்சாட்டுகள் எழுப்பப்படும் மண்டைதீவு சுற்றுலா மையத்துக்கு ஒதுக்கப்பட்ட பல கோடி ரூபாய் நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது என்பதற்கு யார் பொறுப்பு? யாழ் .மாவட்ட செயலக அதிகாரிகள் இந்தத்திட்டத்தை செயற்படுத்தினாலும், கொழும்பு அரசியல் நிர்வாகத்தின் அழுத்தங்களும் அரசியல் நோக்கங்களும் இருந்தன என்ற பின்னணியில் யாழ். செயலக அதிகாரிகள் மீது தேவையற்ற குற்றச்சாட்டுகளை கொழும்பு நிர்வாகமே முன்வைக்கும் ஆபத்துகளும் உள்ளது. கொழும்பு நிர்வாக அரசியல் செல்வாக்குகளின் ஊழல் மோசடிகளை மூடி மறைக்கும் நோக்கில் தான் சமீபகாலமாக வடமாகாண அதிகாரிகள் மீதான குற்றச்சாட்டுகள் எழுப்பப்படுகின்றன. ஆகவே இப்படி ஓர் அபிவிருத்தித்திட்டம் தான், மண்டைதீவுப் பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு மைதானமும் என்ற முடிவுக்கு வரலாம். ஏனெனில் மண்டைதீவில் மைதானம் அமைப்பதற்குரிய சாத்தியக்கூற்று ஆய்வுகள், சுற்றுப்புறச் சூழல் ஆய்வுகள் செய்யப்பட்டமை தொடர்பான ஆய்வு அறிக்கைகள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை. அல்லது வெளியிடப்படாமல் இருக்கலாம்.

இந்த அறிக்கைகள் வடமாகாணத்தை பிரதானப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கையளிக்கப்பட்டதா? அல்லது துறை சார்ந்தவர்களுடன் அது பற்றிய உரையாடல் நடத்தப்பட்டதா? மைதானம் அமைப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டு இரண்டு வாரங்கள் கடந்த நிலையிலும் கூட, இதுவரை ஆய்வு அறிக்கைகள் எதுவும் சமர்ப்பிக்கப்படதாகத் தெரியவில்லை.

அதேநேரம் மண்டைதீவுப் பிரதேசம் விவசாய நிலம் என்றும் அங்கு கடல் வாழ் உயிரினங்கள் இருப்பதாகவும் யாழ். மாவட்டச் செயலகம் 2022 ஆம் ஆண்டு மேற்கொண்ட ஆய்வு அறிக்கை ஒன்று செயலகத்தின் இணையத்தில் உண்டு. பா.ராஜ்குமார் என்ற ஆய்வாளர் மண்டைதீவுக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறார். அதனைவிட மண்டைதீவு விவசாய நிலம் என்றும், ஆனாலும் தொழில்நுட்ப ஆய்வுகள் செய்யப்பட்டு அதற்குத் தேவையான மேலதிக உதவிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் மொறட்டுவ பல்கலைக்கழக மாணவிகள் 2018 இல் செய்த ஆய்வு ஒன்றில் கூறப்பட்டுள்ளது. அதேநேரம் மண்டைதீவின் நிலப் பயன்பாடுகள் பற்றிய ஆய்வு ஒன்றை 2020 இல் செய்த தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவி ஒருவர் அந்த நிலப்பகுதி விவசாயத்தக்குரியது என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

மண்டைதீவில் நன்னீர் வளம் மிகக் குறைவாகவே உள்ளது. தீவின் சில பகுதிகளில் மட்டும் நன்னீர்க் கிணறுகள் உள்ளன. கடல் நீர் நிலத்தின் கீழாக நிலப்பரப்புக்குள் ஊடுருவுவதுதான் இதற்கான காரணம் மண்டைதீவில் மூலிகைகள் அதிகம் காணப்படுகின்றன. 2009 க்குப் பின்னர், யாழ். மாவட்டத்தில் உள்ள சில பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்கள் அங்கு சென்று [illegible] ஆராய்ச்சிகளை மேற்கொள்வதுண்டு.

ஆகவே மண்டைதீவில் சர்வதேச மைதானம் அமைக்கப்பட வேண்டும் எனத் தீர்மானம் எடுத்தவர்கள் இதுபற்றியெல்லாம் கவனம் செலுத்தினார்களா? வெறுமனே அரசியல் நோக்கில் ஆய்வுகள் எதுவுமின்றி, நிலம் ஒன்றைத் தெரிவுசெய்து மைதானத்தை அமைத்த பின்னர் அதில் எழவுள்ள பக்க விளைவுகள் .பாதிப்புகள் போன்றவற்றை எதிர்கொள்ளப் போவது மண்டைதீவு பிரதேச மக்கள் தான். ஆகவே உண்மையில் மக்கள் நலன் நோக்கில் அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றனவா? அல்லது ஜனாதிபதியை மேன்மைப்படுத்தி அபிவிருத்தி என்ற மாயைகளைக் காண்பித்து, 'அரசியல் விடுதலை' என்ற உணர்வுகள் கோரிக்கைகளை தமிழ் மக்களிடம் இருந்து மடைமாற்றும் உத்தியா?

இவ்வாறான உத்திகளையே மஹிந்த, மைத்திரி, கோத்தாபய, ரணில் ஆகியோர் செய்தார்கள். ஆகவே 76 ஆண்டு கால ஆட்சி முறைகளில் இருந்து மாற்றம் என்று மார்தட்டிக்கொண்டு பதவிக்கு வந்த அநுர அரசாங்கமும் முன்னைய சிங்கள அரசியற் தலைவர்கள் மேற்கொண்ட பகட்டு அரசியலை முன்னெடுக்கிறது என்ற உணர்வு சாதாரண மக்களிடம் மேலோங்கியுள்ளது. இதனை யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் தமிழ் எம்.பி.க்களும் புரிந்துகொண்டிருப்பர்.

அதேநேரம் அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் இருந்து பிடித்துக்கொண்டு வரப்பட்ட சுமார் 80க்கும் ; மேற்பட்ட இளைஞர்கள் பெண்கள் கொலை செய்யப்பட்டு மண்டைதீவு தோமையார் ஆலயக் கிணற்றில் வீசப்பட்டுள்ளதாகவும், விசாரணைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் எனவும் சிவஞானம் சிறீதரன் நாடாளுமன்றத்தில் 2023 ஆம் ஆண்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். வேலணைப் பிரதேசசபையும் இதனையொத்த தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி இருந்தது. தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் தலைமையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி இடம்பெற்ற அமர்வில், மண்டைதீவில் உள்ள பல பாழடைந்துள்ள கிணறுகளில் எலும்புக்கூடுகள் இருப்பதாகவும், 1990 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் கொல்லப்பட்டு கிணறுகளுக்குள் வீசப்பட்டதாகவும் அந்தத்தீர்மானத்தில் சொல்லப்பட்டது.

மண்டைதீவில் மனிதப் புதைகுழிகள் இருப்பதாகவும் சாட்சியங்கள் இன்னும் உள்ளன எனவும் உறுப்பினர் பிரகலாதன் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது சுட்டிக்காட்டியிருந்தார். இராணுவம் பொதுமக்களின் காணிகளை அபகரித்து பெரும் முகாம்களை அமைத்துள்ளரொனவும் காணிகளை இழந்த மக்கள் வேறு பிரதேசங்களில் வாழ்கின்றனரெனவும் வேலணைப் பிரதேச சபை உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

ஆகவே சர்வதேச விளையாட்டு மைதானம் அமைக்கப்பதற்கு முன்னர் பிரதேச மக்களின் அடிப்படைவசதிகள், அந்த மக்களின் உள்ளூர் சுயதொழில் முயற்சிகள் போன்றவற்றை ஊக்குவிக்க வேண்டும். குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு முதலில் தீர்வு காண வேண்டும். மைதானம் அமைக்கப்பட்டால் பிரதேச மக்களுக்கு முதலில் அங்கு தொழில்வாய்ப்பு என்பதை உறுதிப்படுத்த வேண்டும். ஆகவே, வெறும் அரசியல் நிகழ்ச்சி நிரலாகவும், தமிழர்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளைக் குறைத்து மதிப்பீடு செய்யும் வகையிலும் அநுர அரசாங்கம் செயற்படக் கூடாது. மைத்திரி ரணில் ஆட்சி காலத்திலும் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப மண்டைதீவில் கிரிக்கெட் மைதானம் அமைக்க முயற்சிக்கப்பட்டது. ஆனால் அப்போது முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரன் மேற்படி ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். இதன் காரணமாக அந்த முயற்சி கைவிடப்பட்டது. ஆகவே மாகாண சபைகள் இயங்காத பின்னணியில், மாகாணங்களின் அதிகாரங்களை மீறும் வகையில் அநுர அரசாங்கம் செயற்படுகிறது என்ற முடிவுக்கும் இப்போது நாம் வரலாம்.

அத்துடன் காணி அதிகாரங்கள், கட்டட நிர்மாண அனுமதி அதிகாரங்கள் அனைத்தும் கொழும்பு நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதையும் இந்த மண்டைதீவு சர்வதேச மைதான விவகாரம் எடுத்துக் காண்பிக்கிறது. 1981 ஆம் ஆண்டு அமர் ஜே.ஆர். ஆட்சியின் போது, யாழ். கல்லுண்டாய் வெளி சர்வதேச விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்டிருந்த முறைகள் பற்றியும் இங்கு ஞாபகத்திற் கொள்வது நல்லது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கமலாம்பாள்

ஆனந்தி

28

தொடர் கவிதை



தாய்ப்பாலைச் சொரிந்து
குளிப்பாட்டிச் சோறூட்டி
மார்மீது போட்டு
மடிதன்னில் கிடத்தி...
கைகளுக்குள்....காத்துவைத்த
காலப் பொக்கிசத்தை
போர் கொண்டு போன கதை
யாருக்கு நான் உரைப்பேன்?

வரும் வரை வழிபார்க்கும்
காலம் தப்பிவிட....
படலை வரை கால்கள் நடக்கும்
எட்டி எட்டி ...வீதி பார்த்து
விதியிடம் தொலைத்த கதை
இது செத்தாலும் சாகாத ...
சாபக்கதை!

கர்ப்பப்பை உதைக்க
ஆண்பிள்ளை அசைவுணர்ந்த
இதயம் பரக்க நடுங்கி...
கணவன் மார்புக்குள் மடங்கி
இறப்பின் வேதனையை..
காட்டி மறைத்த
இயற்கைக்குத் தெரியாதா
ஒரு தாயின் வலி?

விந்து பந்தாகி முளைத்து...
குடல் பிடுங்கி..குமட்டி
விரதம் காத்து....
பிரசவ அறை நடுங்க அழுது..
பிஞ்சு முகம் பார்த்து
முழுதும் மறந்து முக்காலமும்
மீண்டு வந்து ..
தொண்டைக்குள் நின்று
துயரம் கட்டும்...மூச்சு முட்டும்!

கல்லொன்றை வயிற்றில் கட்டியதாக
ஒருங்களித்துப் படுக்காமல்
உடல் உபாதை கொண்டு...
கை கால் வீங்கி
படபடக்கும் இதயத்தின்
ஓரங்களில்..ஒளித்திருக்கும்
நம்பிக்கை...
சிறுபிஞ்சின் முகம் பார்த்து
சிரித்தும்..கண்ணீர்விட்ட காலங்கள்
கனவில் வந்து பல்லிளிக்கும்
நெய்யாண்டி காட்டி மறையும்!

புதிய உறவொன்றின் வருகை
இனிதான நாள்களெல்லாம்
இறக்கை கட்டிய இதயம்
மார்பைப் பிடித்து சாய்ந்த கணவன்..
இனி இல்லையென்ற போது
எல்லாம் இருளாகிய பொழுதுகள்..
மூன்று குஞ்சுகளை அடைகாக்கும்
தாயானேன்.....
போருக்குள் மாளாமல்
நோய்கொண்டு போகாமல்
பூதமாகிப் புதையல் நான் காத்தேன்!

உறவுகள் கைகொடுக்க
பிஞ்சுகளை வளர்க்க...
கட்டுப்பாட்டுக் கைதியாக
அடுப்பங்கரை அரசியாக
வாழ்ந்தேன்...
துணிவு தொலைத்தவள்..
துர்ப்பாக்கியம் கொண்டவளாக
கருப்பையின் கடமைக்காக
கால வண்டிலை நான்
இழுத்துக் கரை சேர்த்தேன்!

இளமை உணராது...
இதயம் நனையாது
இறுக்கம் தளராத
இளைய இரத்தங்கள்
தாய் கொண்ட நோவையும்
சூல் கொண்ட சுகத்தையும்
சிதைத்து அறுத்து....காணாத
தேசத்தில்
சிறைவைத்துப் போனாரோ?
காத்திருக்கும் தாயின் ...
கனதி உணர்வுக்கு
மாற்றார் எவரும் வந்து
மருந்து தருவாரோ?

அன்றொருநாள் போனவனை
பொழுதெல்லாம் தேடுகிறேன்....
பொழுது சாய்கையிலே....
புலரும் வேளையிலே.....
வானம் பூமாரி பொழிகையிலே...
என் மனதின் ஒப்பாரி
ஓயாமல் ஒலிக்கும்..
யாருக்கும் கேட்காது.

எங்கே அய்யா போனாய்?
ஏர் உழைக்கும் பூமியெங்கும்...
வான் பார்த்துக் காத்திருக்க...
நான் வளர்த்த மரங்கள்
உனக்காக பூத்திருக்க....
போன திசை பார்த்து ...
நாளும் பொழுதிலெல்லாம்
நான் பார்த்துக் காத்திருக்கும்
தாளாத துயரத்தை
ஏன் தந்தாய் என் மகனே?

நீ ஓடித்திரிந்த நிலங்களை
யார் யாரோ விலைபேச....
வீட்டின் எல்லைகளை
விலைவாசி கணக்கேற்ற ....
வானுயரக் கட்டடங்கள்....
மேலுயர்ந்த கோபுரங்கள்....
நீ வாழ்ந்த வீட்டின்
வடிவை அழிக்குதையா!

துண்டுநிலங்களை மெல்ல
பார்த்திருக்கும் போதே
சூறையாடும் நிலத்திருடர்.....
பாதை சுருக்கி பாகம் பிரித்து
பிணங்கூட போகாத
வழியொன்றைத் தருகின்றார்.
நெருக்கி நெருக்கி...
என் வளவைத் தமதாக்கும்
காலம் தூரமில்லை....
நிலத்தின் பெறுமானம்
பலமடங்காய் ஆனதய்யா?
உயிருக்கு ஒன்றும் இங்கு
பெறுமதியே இல்லையய்யா!

பெறுமதி கணக்கிடாப்
பெருமதிப்பை தொலைத்த கதை
அவர் அறியார்...
உன்னை விடவா இவ்வுலகில்
இது பெரிது...
எடுத்தவன் போகட்டும்
இறப்புக்கு எழுதட்டும்...
நீ மட்டும் வந்தால் போதுமையா!

ஐயனே உன் நினைவை
அள்ளித் தரும் இவ்வீடு
நீ ஒளித்து நான் உன்னைப்
பிடித்து விளையாடிய வரலாறு...
சோறு கொட்டி...தவழ்ந்த

நீ குதூகலித்த நிலங்கள்...
அப்படியே இருக்கட்டும்
நீ வரும் வரைக்கும்!
மடியில் வைத்துன்னை
மகிழ்ந்த நெஞ்சு
அணைத்துப் பால்சொரிந்த
மார்பகங்கள்...
கொள்ளியில் எரித்தாலும் வேகாது
உன்னைக்காணாது சாகாது !

தேடல் கொடுமையய்யா?
தனிமை வெறுமையய்யா?
எங்கேயய்யா உன் உருவம்
ஒளிந்து இருக்கிறது....?
வருவாய் என்கிறது...சாஸ்திரங்கள்
மீள்வாய் என்கிறது மந்திரங்கள்
கனவிலும் வராமல் உன்
உணர்வு.... எங்கிருந்து
எனை நினைக்கும்?

புரக்கேறும் பொழுதுகள்
நீ இருக்கும் நம்பிக்கையை
நகர்த்துகின்றன....
தேசம் விட்டு வா என அழைக்கும்
மூத்த பிள்ளைகளுக்கு
மறுக்கிறேன் ....
என் இளையவன் வருவான்....
காத்திருக்கிறேன்....
என்கிறது... என் வைராக்கியம்!

உருவம் இயந்திரமாய் நகர்கிறது..
தனிமையில் தவிக்கும் தாயை
கமராவில் கண்காணிக்கிறது
பாசம்....
எனை நினைத்து அவை
நிம்மதியைத் தொலைத்தன.
உன்னால் தொடங்கிய வலி
படர்ந்து ...வளர்ந்து
வலியே வாழ்வாகிப் போனது
அக்காவும் அண்ணாவும் ...
உள்ளுக்குள் வதங்கி அழுகின்றனர்.....
எங்கிருக்கிறாய் மகனே?

என் வீடும் என் வாழ்வும்.....
மாற்றம் கூட்டவில்லை...
ஏற்றம் காட்டவில்லை...
மாடிகளுக்கு நடுவில்..வெறும்
தட்டை வீடாகிக் கிடக்கும்....
தணலில்...தகிக்கும்
இரும்புக்குழம்பாய்..
இரவின் நெருப்பு...
என்னை எரித்துச்செல்லும்...

மாற்றங்கள் மூளையை
மறக்கக் கேட்கின்றன....
குழப்பம் என் மனதை
ஆக்கிரமிக்கிறது....
நீ தேடி வரவேண்டும் மகனே!
அழுது களைத்து ....
ஆர்ப்பரித்து முடிந்து
எரிந்து சாம்பலாய்
மணல் மேட்டில் இருக்கிறேன்...

காலன் என்னைக் கடத்த முடியாது
காலம் என்னை ஏமாற்ற இயலாது
நீ வந்து கொள்ளியிட்டால் வேகும்
என் உடல்...
உன் முகம் பார்க்காது வேகாது....
என் உயிர்...
எங்கிருந்தாலும் வந்துவிடு!

தாய்மைக்குத் தண்டனையை
ஏன் தந்தாய் இறைவா?
கர்ப்பம் கலைந்தாலே
பொறுக்காத தாய் மனதைக் கலக்கி...
கல்லாக்கி நொருக்கி...
நூலாக்கித்திரித்து
எண்ணெயில்லாமல் எரிக்கிறாய்!

கர்ப்பப்பை கிழித்து....
தலை தள்ளி....
பூமி பார்க்க வந்த
என் மகனை காலமே
எங்கே நீ ஒளித்தாய்?
வாலிபப்பருவம் அனுபவிக்கும் முன்
அவன் வாழ்வை ஏன் அழித்தாய்?

போனவன் வராமல் போனதென்ன?
போருக்கு அழைத்தாரோ?
போராளியென்று பிடித்தாரோ?
சுற்றிவளைத்து சுட்டு மடக்கினரோ?
யாரை எண்ணி யாருக்கு வலை
விரித்தாரோ?

போருக்குத் தொடர்பில்லா மகனை
ஊருக்குத் தொடர்பின்றிச்
செய்தாய் இறைவா?
எங்கெல்லாமோ தேடிக்களைத்து
வருவாய் தானே என வாசலில்
இருக்கிறேன்...
என் நம்பிக்கையை காப்பாற்றிக் கொடு
என் மகனை என்னிடம் சேர்
மீள நினைத்தழும் துயர் நீக்கி
என்மகனை பார்க்கத் தருவாயா?
பகைவா?
அவனோடு சிறு காலம்
வாழ விடுவாயா இறைவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாணத்துக்கா
# விசேட மகளிர் சிகிச்சை மை

மு.தமிழ்ச்செல்வன்

கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டவில்லை என்ற பழமொழி அப்படியே அச்சொட்டாக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வடமாகாணத்துக்கான விசேட மகளிர் சிகிச்சை மையத்துக்குப் பொருந்துகிறது. நெதர்லாந்து அரசின் நிதி உதவியில் பல கோடி ரூபா செலவில் 2017ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டு 2024ஆம் ஆண்டு அன்றையஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவால்திறந்துவைக்கப்பட்டு ஒன்றரை வருடங்கள் கடந்தும் எந்தவொரு செயற்பாடும் இன்றிக் காணப்படுகிறது இந்த விசேட மகளிர் சிகிச்சை மையம்.

எனவே கடந்த சில நாள்களாக கிளிநொச்சியில் பேசப்படும் விடயமாக இது மாறியிருக்கிறது. இது தொடர்பில் வரும் செய்திகளைப்பார்க்கும்போது, வட மாகாணத்துக்கான விசேட மகளிர் சிகிச்சை மையம் தொடர்பான விடயங்கள் ஏதோ தற்செயலாக நடைபெறுவதுபோல ஒரு பிம்பம் கட்டமைக்கப்படுவதுபோலத் தெரிகிறது. ஏனெனில், கடந்த வாரம் கூட "கிளிநொச்சி பொது மருத்துவமனை மகப்பேறு பிரிவைச் சார்ந்த முறைப்பாடுகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் நேரில் ஆய்வு" என்ற செய்தி ஊடகங்களில் வெளியாகியிருந்தது. இதன்போது 'பெண் நோயியல் மற்றும் சிறப்பு மகப்பேறுப் பிரிவை இயக்குவதில் உள்ள தடைகள், ஆளணி உருவாக்கம் மற்றும் மேலதிக ஆளணி நியமனம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது' என அச் செய்தி தொடர்ந்து செல்கிறது.

இதனிடையே 24.08.2025 அன்று அவசர அவசரமாக வட மாகாண ஆளுநர் தலைமையில் கிளிநொச்சி நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் உட்பட சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் கூடி வட மாகாணத்துக்கான விசேட மகளிர் சிகிச்சை மையத்தினை எவ்வாறு இயக்குவது என்று ஒரு கலந்துரையாடல் நடத்தியுள்ளனர். 29.08.2025 அன்று இந்தச்சிகிச்சை மையத்தினை இயக்குமாறு கோரியும் இதில் காணப்படும் அதிநவீன உபகரணங்களை வேறு மருத்துவமனைகளுக்கு மாற்றும் திட்டத்தினைக் கைவிடுமாறு கோரியும் பொதுமக்களைக் கூட்டி கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனையின் நோயாளர் நலன்புரிச்சங்கத்தினர் ஒரு போராட்டத்தை நடத்தியிருக்கின்றனர்.

ஆளுநரது கலந்துரையாடலில் தீர்வாக தற்போது கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனையில் இயங்கிவரும் மகப்பேற்று மற்றும் பெண் நோயியல் விடுதிகளையும் சிறுவர் விடுதியினையும் குறித்த வட மாகாணத்துக்கான விசேட மகளிர் சிகிச்சை மையத்திற்கு உடனடியாக நகர்த்துமாறு ஆளுநர் உத்தரவிட்டுள்ளார் என்ற செய்தியும் வெளிவந்தது. இவை எல்லாவற்றுக்கும் பல படிகள் மேலே போய் நோயாளர் நலன்புரிச் சங்கம் நடத்திய ஆர்ப்பாட்டம் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டமாக அரசு தரப்பு மக்கள் பிரதிநிதி ஒருவரால் கருதப்பட்டுக் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டதுதான் வேதனையின் உச்சமாகும்.

இந்தநிலையில், சில உண்மைகளை ஆதாரத்துடன் பொதுவெளிக்குக் கொண்டுவரவேண்டிய தேவையுள்ளது. குறிப்பாக, மேற்படி மையமானது கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் காலப்பகுதியில், இன்றிலிருந்து சரியாக மூன்று வருடங்களுக்கு முன்னதாக 2022ஆம் ஆண்டு ஆவணி மாதம் எட்டாம் திகதி பல்வேறு விரிவான ஆதாரங்கள் மற்றும் அவற்றின் அடிப்படையிலான எதிர்வுகூறல்களுடன் இந்தக் கட்டுரையாளர் ஒரு கட்டுரையினை எழுதியிருந்தார். அந்தக் கட்டுரையின் இறுதியில் .

"சுருக்கமாகச் சொல்வதானால் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் ஒரு விரிவாக்கமாகவே (Extension of General Hospital Kilinochchi) இந்த விசேட மகளிர் சிகிச்சை மையக் கட்டடத்தொகுதி இயக்கப்படுவதற்கு அதிக சாத்தியங்கள் உண்டு.

அதனால், புதிய கட்டடத்தொகுதியிருந்து தற்போதைய மருத்துவமனைக்கும் இங்கிருந்து அங்கு வெட்ட வெளி ஊடாக மழையிலும் வெயிலிலும் நோயாளர்களை காவித் திரிவார்கள். அரசு திட்டமிடாமல் புதிய கட்டடத்தொகுதியை தொலைவில் அமைத்துத் தமிழ் நோயாளர்களை திட்டமிட்ட கொலை செய்வதாக' நாடாளுமன்றத்திலும் பேசுவார்கள். அவர்கள்தான் இந்தப் புதிய கட்டடத்தொகுதியைத் தற்போதைய இடத்திற்கு தள்ளினார்கள் என்பதை அறியாத அல்லது வசதியாக மறந்த அவர்களது ஆதரவாளர்கள் கைதட்டி மகிழ்வார்கள். அப்போதைய மருத்துவமனைப் பணிப்பாளர் சனங்களுக்காக மூடிய நடைபாதை (covered way) அமைத்துத் தரும்படி நலன்விரும்பிகளுக்கு கோரிக்கை வைப்பார்கள். அதை ஏற்று புலத்திலுள்ள பலர் நெஞ்சுருகி நிதியளிப்பார்கள். வடக்கில் விசேட மருத்துவ வசதி தேவைப்படும் பெண்களும் கர்ப்பவதிகளும் கொழும்பிற்கும் வெளிநாடுகளுக்கும் நடையாய் நடப்பார்கள். இது தவிர்க்கப்படவேண்டுமானால் உரிய தரப்பினருக்கு தற்போதே தேவையான அழுத்தங்களை அனைவரும் ஒருமித்து வழங்கவேண்டும். திட்டத்தினை முன்னெடுக்கும் நெதர்லாந்து அரசிற்கு நேரடியாகவே இந்தக் கள நிலவரத்தைத் தெரிவிக்க வேண்டும்." என்று கூறப்பட்டிருந்தது.

இந்தக்கட்டுரை பல ஊடகங்களில் பிரசுரமானதும் கிளிநொச்சியின் சுகாதாரத்துறை அதிகாரிகளும் சில மூத்த மருத்துவர்களும் கட்டுரையாளரை அப்போது கடிந்துகொண்டார்கள். இது தேவையற்ற விமர்சனம் என்று குற்றம்சாட்டி னார்கள். ஆனால் இப்போது அந்தக் கட்டுரையில் சொன்னபடிதானே நடக்கிறது? வெளியே உள்ள ஓர் ஊடகவியலாளனான் எனது பொது அறிவுக்கு ஊகிக்க முடிந்த விடயங்களை அதே துறையில் வல்லுநர்களாக இருப்பவர்களால் ஏன் எதிர்வுகூறவோ அல்லது மாற்று நடவடிக்கைகளை உரியநேரத்தில் எடுக்கவோ முடியாது போனது? என்ற கேள்வி தற்போது எழுவதைத் தவிர்க்கமுடியவில்லை.




## சாத்தியவள ஆய்வு (Feasibility study)

அடுத்த கட்டமாகத் திட்டத்துக்கான பூர்வாங்க சாத்தியவள ஆய்வுகளை மேற்கொள்வதற்கு 2016/2017 காலப்பகுதிகளில் ஆகக் குறைந்தது பத்துத் தடவைகள் நெதர்லாந்து குழுவினர் கிளிநொச்சி மருத்துவமனை, வடமாகாண சுகாதார அமைச்சு மற்றும் தென்பகுதியில் அமைந்துள்ள விசேட மகளிர் சிகிச்சை மையங்கள் ஆகியவற்றுக்கு நேரடியாக வருகை தந்திருந்தனர். மத்திய சுகாதார அமைச்சின் அப்போதைய திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் நாயகமும் (Deputy Director General Planning) நேரடி கள ஆய்வில் ஈடுபட்டதுடன் பல்வேறு பங்குதாரர் கலந்துரையாடல்களும் (Stakeholder discussions) நடத்தப்பட்டன

ஏ-9 பிரதான மார்க்கத்தில் உள்ள வடக்கின் பிரதான மருத்துவமனைகளில் ஒன்றான கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனைக்கு அவசர விபத்துச் சிகிச்சைப்பிரிவுக்கான முறையான வசதிகளுடன் கூடிய கட்டடம் ஒன்று அதுவரை அமைக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் இரண்டாம் கட்ட மருத்துவமனை அபிவிருத்தியில் அவசர மற்றும் விபத்துச் சேவைப் பிரிவுக்கு முன்னுரிமை வழங்குவது எனவும் அதனை விசேட மகளிர் சிகிச்சை மையத்தின் தரைத்தளத்தில் அமைப்பது என்றும் அப்போது அவ்விடயத்தில் சம்பந்தப்பட்டிருந்த சகலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. விசேட மகளிர் சிகிச்சை மையத்தின் தரைத்தளத்தில் 'சீ.ரி. ஸ்கானருடன் 'கூடிய அவசர மற்றும் விபத்து சேவைப் பிரிவினை (Accident and Emergency Unit with CT scan facilities) அமைப்பது என்றும் அது கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கும், விசேட மகப்பேற்று அலகுக்கும் பொதுவானதாக இருக்கும் என்றும் ஆலோசிக்கப்பட்டது.

இதன்மூலம் ஆளணிகள் உள்ளிட்ட வளங்கள் பரவலாக்கப்படமால் ஒருங்கிணைக்கப்படும் (pooling of avilable resources) னவும் கிளிநொச்சி மருத்துவமனையின் தனித்துவமான 'வெளி நடைபாதைகள் அற்ற மருத்துவமனை (Unique hospital without covered way)| வடிவம் பேணப்படும் எனவும் மேற்குறித்த ஆலோசனை நியாயப்படுத்தப்பட்டிருந்தது. அதற்குப் பொருத்தமாக கிளிநொச்சி மருத்துவமனை யின் தற்போதைய கட்டடத் தொகுதியுடன் இணைந்தவாறு (தற்போதைய அவசர சிகிச்சைப்பிரிவிற்கு முன்பாக) நெதர்லாந்து அரசினால் அமைக்கப்படப் போகும் கட்டடத்தொகுதியினைக் கட்டுவதே சிறந்தது என முன்மொழியப்பட்டது. இந்த முன்மொழிவானது கிளிநொச்சி பொறியியல்பீட துறைசார் வல்லுநர்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனையின் மருத்துவநிபுணர்கள் உள்ளிட்ட

### பின்னணி

'வடக்கிலேயே மகளிருக்கான ஒரு விசேட சிகிச்சை மையத்தினை (Specialized centre for Women|s health in Northern Province) உருவாக்க வேண்டும்' என்ற பரிந்துரை விசேட முன்மொழிவாக (Special Proposal) மருத்துவ நிபுணர்கள் கொண்ட ஆலோசனைச் சபையினால் வடக்கு மாகாண சபைக்கு 2015/2016 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்டது. இலங்கையில் அவ்வாறான விசேட மகளிர் சிகிச்சை மையங்களாக கொழும்பு டி சொய்ஸா மகளிர் மருத்துவமனை, கொழும்பு காசில் வீதி மகளிர் மருத்துவமனை, காலி மகளிர் மருத்துவமனை ஆகியன செயற்படுகின்றன.

இதன் காரணமாக வடக்கில் கர்ப்பவதிகள் உள்ளிட்ட பெண்களுக்கு விசேட சிகிச்சைகள் தேவைப்படும்போது தென்பகுதிக்கு அனுப்பப்படும் நிலையே தற்போது காணப்படுகிறது. அது தவிர, குழந்தைப் பேறு கிடைக்காதவர்களுக்கான கருவளவாக்கல் சிகிச்சையினைப் பெறுவதற்கு வடமாகாண மக்கள் பெரும் பொருட்செலவில் கொழும்பிற்கும் வெளிநாடுகளுக்கும் செல்லவேண்டி உள்ளது. இதனால் வடமாகாண மக்களுக்கு ஏற்படும் சிரமங்கள், பொருளாதார நெருக்கீடுகள் மற்றும் வசதியீனங்களைக் கருத்திற்கொண்டு, அவை எல்லாவற்றுக்கும் நிரந்தரத் தீர்வாகவே துறைசார் வல்லுநர்களால் மேற்படி திட்ட முன்மொழிவு வடக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்தத்திட்டத்தின் ஆரம்ப காலப்பகுதியான 2016/2017ஆம் ஆண்டுகளில் இந்த விசேட மகளிர் சிகிச்சை மையத்தினை அமைப்பது தொடர்பான பூர்வாங்கக் கலந்துரையாடலுக்கு நெதர்லாந்து அரசின் பிரதிநிதிகள் கிளிநொச்சி மருத்துவமனைக்கு வந்திருந்தார்கள். அவ்வேளையில் நெதர்லாந்து உட்பட்ட சர்வதேச நிதிப் பங்களிப்புடன் அமைக்கப்பட்டு யுத்த சூழலால் இடைநடுவில் தடைபட்டுப்போன கிளிநொச்சி மருத்துவமனையின் இரண்டாம் கட்டத்தினை நிறைவுசெய்ய வேண்டியதற்கான தேவை குறித்து மாவட்ட மற்றும் மருத்துவமனைச் சுகாதாரத் தரப்பினரால் எடுத்துரைக்கப்பட்டது. மிகுந்த அக்கறையுடன் அதுகுறித்து கேட்டறிந்த நெதர்லாந்து குழுவினர், தம்மால் அமைத்துத் தரப்படவுள்ள விசேட மகளிர் சிகிச்சை மையத்துடன் இணைந்ததாக, மருத்துவமனையின் இரண்டாம் கட்டத்தில் அமைக்கப்பட வேண்டியுள்ள பிரதான பிரிவுகளில் ஏதாவது ஒன்றினையும் அமைத்துத் தருவதாக உறுதியளித்தனர். எனவே மீளமைப்புச் செய்யப்பட்ட மூலத்திட்டத்துடன் (revised master plan) முழுமையான முன்மொழிவினை (comprehensive proposal) விரைவில் சமர்ப்பிக்குமாறும் அதன் அடிப்படையில் இரண்டாம் கட்ட அபிவிருத்திக்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும் எனவும் தேசியத் திட்டமிடல் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. மத்திய சுகாதார அமைச்சு மற்றும் இலங்கைத் தேசியத் திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றின் ஆலோசனையின் பிரகாரம் 2016 டிசெம்பர் மாதம் மருத்துவமனையின் மூலத் திட்ட மீளாய்வுச் செயற்பாடு (Revision of hospital master plan) மற்றும் முழுமையான முன்மொழிவினை வரையும் செயற்பாடு என்பன ஆரம்பிக்கப்பட்டன. இருப்பினும் குறித்த வடக்கிற்கான விசேட மகளிர் சிகிச்சை மையம் உள்ளிட்ட இரண்டாம் கட்ட அபிவிருத்தியில் சேர்க்கப்பட வேண்டிய சில அலகுகள் இந்த மருத்துவமனையின் ஆரம்பகாலத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த மூலத்திட்டத்தில் (Master plan) இருந்திருக்கவில்லை. மருத்துவமனையின் மூலத்திட்ட மீளாய்வு (Revision of hospital master plan) மற்றும் முழுமையான முன்மொழிவினை வரையும் செயற்பாட்டுக்காக (drafting comprehensive proposal) 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அப்போதைய மாவட்ட சுகாதார நிர்வாகத்தினால் விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கான ... மையம்



## ...கைக்கு எட்டிய ...ம் வாய்க்கு எட்டவில்லை

குழுவினர் 29/12/2016 அன்று மருத்துவமனையில் மூலத்திட்ட மீளாய்வுச் செயற்பாட்டில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்டது. இந்த ஆய்வுகளின் பிரகாரம் வடக்கிற்கான விசேட மகளிர் சிகிச்சை மையத்தினைக் கிளிநொச்சி மருத்துவமனையின் தற்போதைய அவசரசிகிச்சைப்பிரிவுக்கு முன்பாக அமைப்பதாகவும் அந்த அலகின் தரைத்தளத்தில் ' சீ.ரி. ஸ்கானருடன் 'கூடிய அவசர மற்றும் விபத்து சேவைப் பிரிவு அமைக்கப்படும் எனவும் இறுதி முடிவு எட்டப்பட்டதுடன் முன்மொழியப்பட்ட செயற்றிட்டமும் [Proposed action plan] இறுதிசெய்யப்பட்டது .

அதனைத் தொடர்ந்து, சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவு சகலராலும் ஏற்கப்பட்டு அதற்குரிய பரிந்துரை 04.05.2017 ஆம் திகதிய கடிதம் ஊடாக இலங்கை தேசியத் திட்டமிடல் திணைக்களத்தினால் (Department of National Planning) வழங்கப்பட்டது இந்தக் கடிதத்தில், 4474 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்ட — இரண்டாம் கட்ட அபிவிருத்தியின் முதலாம் பகுதியான (Stage II> Phase I) — வடக்கிற்கான விசேட மகளிர் சிகிச்சை மையம் (Center of Excellence for Women Care) நெதர்லாந்து அரசின் உதவியுடன் 1974 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் என்றும் கட்டம் இரண்டின் மிகுதியான 2500 மில்லியன் ரூபா பெறுமதியான கட்டுமானங்கள் பாதீட்டு ஒதுக்கீட்டின் ஊடாக நிர்மாணிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதாவது 4474 மில்லியன் ரூபா மொத்த மதிப்பீட்டில், வடக்குக்கான விசேட மகளிர் சிகிச்சை மையத்தினையும் உள்ளடக்கி கிளிநொச்சி மாவட்டப் பொதுமருத்துவமனையின் இரண்டாம் கட்ட அபிவிருத்திக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவானது இரண்டு மாதங்களில் சகல மட்டங்களிலும் பரிந்துரைக்கப்பட்டு அதற்குரிய நிதிமூலங்களும் அடையாளப்படுத்தப்பட்டு விட்டன. இந்த அனுமதியின் பிரகாரம் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால், பாதீட்டின் ஊடாக 2500 மில்லியன் ரூபா பெறப்பட்டு இப்போது கிளிநொச்சி மருத்துவமனையின் இரண்டாம் கட்ட அபிவிருத்தியும் நிறைவேறியிருக்கும்.

### வெளியார் தலையீடுகள்

இருந்தபோதிலும், 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சில அரசியல்வாதிகள், மூத்த மருத்துவர்கள் ஓரிருவர், மற்றும் உள்ளூர் வல்லுநர்கள் எனப் பிரகடனப்படுத்திக்கொண்ட வெளியாட்கள் சிலர் "மூலத் திட்டத்தில் [Master Plan] இந்த மையம் இல்லை. இவ்வாறான திட்டம் குறித்துப் 'பொதுமக்களாகிய' தமக்கு எதுவும் தெரியாது" எனக் காரணம் காட்டி 'வடக்கிற்கான விசேட மகளிர் சிகிச்சை மையமானது கிளிநொச்சி மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்படக்கூடாது' என்று போர்க்கொடி தூக்கினர். இந்தக்காலப்பகுதியில் மாகாண மற்றும் மாவட்ட அரசியல் மற்றும் சுகாதார நிர்வாக பதவிநிலை மாற்றங்கள் ஏற்பட்டு புதியவர்கள் பொறுப்பேற்றிருந்தனர். இந்தப் பின்னணியில் 17.02.2018 அன்று கிளிநொச்சிப் பொது மருத்துவமனையில் அப்போதைய வடமாகாண சுகாதார அமைச்சர் தலைமையில் கூடி "குறித்த மையத்தினை மருத்துவமனைக் காணியில் அமைப்பதா அல்லது வேறு இடத்தில் அமைப்பதா என்பது தொடர்பிலும், இது கிளிநொச்சி பொது மருத்துவமனையின் இரண்டாம் கட்ட அபிவிருத்தியாகக் கருதப்படுமா?" என மேற்குறிப்பிட்ட அனைவரும் ஆராய்ந்தனர்.

அதாவது, வடக்கு மாகாணசபை, வடக்கு சுகாதார அமைச்சு, மத்திய சுகாதார அமைச்சு, நெதர்லாந்துப் பிரதிநிதிகள், மாவட்ட சுகாதார சேவைகள், மருத்துவ நிபுணர்கள் மற்றும் கிளிநொச்சி பொறியியல்பீட வல்லுநர்கள் ஆகிய அனைவரும் 2016ஆம் ஆண்டிலிருந்து கலந்துரையாடித் தயாரித்துச் சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் விளக்கமளிக்கப்பட்டு, 2017ஆம் ஆண்டில் தேசியத் திட்டமிடல் திணைக்களம், திறைசேரி, வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஆகியனவற்றினால் அங்கீகரிக்கப்பட்டு, நிதிமூலங்களும் இனங்காணப்பட்ட திட்டம் குறித்த ஒரு சாத்தியவள ஆய்வினை (feasibility study) அவர்கள் நடத்தினார்கள். இவற்றின் தொடர்ச்சியாக, வட மாகாணத்துக்கான விசேட மகளிர் சிகிச்சை மையத்தினை கிளிநொச்சி மருத்துவமனை வளாகத்தினுள் முன்னர் தீர்மானிக்கப்பட்ட இடத்தில் — அதாவது தற்போதுள்ள மருத்துவமனைக் கட்டடத்தின் முன்புறத்தில், சிறுவர் பூங்காவினை உள்ளடக்கிய பிரதேசத்தில் — கட்ட அனுமதிப்பதில்லை" என்ற தமது முடிவினைப் புதிய மாவட்ட சுகாதார நிர்வாகத்தினர், மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஊடாக நெதர்லாந்துக் குழுவுக்கு தெரியப்படுத்தியிருந்தனர்

மாகாண முன்னாள் பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) ஒருவரிடம் இதுபற்றிக் கேட்டபோது "திட்டமிடலின் அடிப்படையினையே கேள்விக்குறியாக்கும் ஒரு செயற்பாடு இது. சாத்தியவள ஆய்வானது எந்தவொரு திட்டமும் தொடங்கப்படுவதற்கு முன்னதாகச் செய்யப்படவேண்டியது. திட்ட முன்மொழிவு ஏற்கப்பட்டு, திட்ட அமைவிடம் (project location) இறுதி செய்யப்பட்டு, நிதி மூலங்களும் தீர்மானிக்கப்பட்டுச் சில மாதங்களுக்குள் மீண்டும் சாத்தியவள ஆய்வில் ஈடுபடுவதென்பதும் திட்ட அமைவிடத்தினை மாற்றும் முடிவினை எடுத்ததும் படு முட்டாள்தன மானது. இவ்வாறான ஒரு திட்டம் இப்போது செயலிழந்து கிடப்பதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை. இந்தப் புள்ளியில் தான் இத்திட்டத்தின் தோல்விக்கு அத்திபாரம் இடப்பட்டுள்ளது. இதில் சம்பந்தப்பட்ட சகலரும் பொறுப்புக் கூறலுக்கு உள்ளாக்கப்படவேண்டும்" என மிகக் கடுமையான கருத்தினை முன்வைத்தார்.

இவற்றின் மத்தியில், மருத்துவமனையின் மூலத்திட்ட மீளாய்வுச் செயற்பாடு (Revision of hospital master plan) மற்றும் முழுமையான முன்மொழிவினை வரையும் செயற்பாட்டுக்காக 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அமைக்கப்பட்ட விசேட குழு 22.03.2017 இல் முன்மொழியப்பட்ட செயற்திட்டத்திற்கமையக் கட்டணம் எதுவும் இன்றி — பல மில்லியன் ரூபா செலவாகக்கூடிய—மூலத்திட்ட ஆவணங்களை இலத்திரனியல் வடிவத்திற்கு [Soft version] மாற்றுவது மற்றும் கிளிநொச்சி மருத்துவமனையின் மூலத் திட்ட மீளாய்வு வரைபடத்தினை [architectural drawings] இற்றைப்படுத்தும் நடவடிக்கை ஆகியவற்றில் இறங்கியிருந்தது. அவர்களது உதவி இனிமேல் தேவைப்படாது எனவும், தாமே அதனைச் செய்துகொள்வதாகவும் தெரிவித்து மாவட்ட சுகாதாரத்துறையினரால் அந்தக்குழுவின் உதவி புறக்கணிக்கப்பட்டது. ஆனால் இதுநாள்வரையில் கிளிநொச்சி மருத்துவமனையின் மூலத் திட்ட மீளாய்வு வரைபடமானது இற்றைப்படுத்தப்படவில்லை என்பது இவ்விடத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

### தற்போதைய நிலை

வடக்குக்கான விசேட மகளிர் சிகிச்சை மையக் கட்டடத்தொகுதியை முழுமையாக இயக்கமுடியாது எனத் தற்போதைய சுகாதாரத்துறை நிர்வாகம் கூறுகிறது. இதற்கு 'இரண்டு இடங்களில் அலகுகளை இயக்குவதற்கு ஆளணி போதாது. முக்கியமாக தாதியர்கள் மற்றும் சுகாதார சேவைகள் உதவியாளர்கள் தேவை, மற்றும் வடக்குக்கான விசேட மகளிர் சிகிச்சை மையக் கட்டடத்தொகுதியை இயக்குவதற்கு முன்னர் அதன் கழிவு வடிகால்களை பிரதான மருத்துவமனைக் கட்டடத்துக்கான கழிவகற்றல் தொகுதிகளுடன் இணைக்கவோ அல்லது தனியாக கழிவகற்றல் தொகுதியை அமைக்கவோ காலம் தேவை' என்ற காரணிகள் கூறப்படுகின்றன.

இதிலிருந்து, கிளிநொச்சி மருத்துவமனையின் தனித்துவமான 'வெளி நடைபாதைகள் அற்ற மருத்துவமனை (Unique hospital without covered way)| வடிவம் இழக்கப்பட்டு விட்டதும் வடக்குக்கான விசேட மகளிர் சிகிச்சை மையக் கட்டடத்தொகுதியை முழுமையாக இயக்குவதில் பல மேலதிக செலவீனங்கள் மற்றும் நடைமுறைச் சிக்கல்கள் எழுந்துள்ளமையும் தெளிவாகிறது. இதனால், ஏற்படும் அழுத்தங்களைச் சமாளிக்கும் நோக்குடனும் வளங்களைப் பயன்பாடின்றி அழியவிடாமல் தடுக்கும் நோக்குடனும், கிளிநொச்சி மருத்துவமனையின் குழந்தைகள் மற்றும் மகப்பேற்றுப் பெண் நோயியல் பிரிவுகளை இந்த புதிய மையத்திற்கு மாற்றுமாறும் முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவே கருதவேண்டியுள்ளது.

இதன்மூலம் வட மாகாணத்துக்கான விசேட மகளிர் சிகிச்சை மையமானது கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனையின் குழந்தைகள் மற்றும் மகப்பேற்றுப் பெண் நோயியல் பிரிவாக மாறப்போகிறது. இதனையே மூன்று வருடங்களுக்கு முன்னர் எழுதிய கட்டுரையில் பின்வருமாறு கட்டுரையாளர் எதிர்வுகூறியிருந்தார். கேள்வி எழுப்புவர்களுக்கு 'இதுதான் அது' என்றோ அல்லது 'தற்போதைய பொருளாதார நிலையில் அரசு புதிய ஆளணிகளை வழங்காது. அதனால் கட்டடத்தை உபயோகிப்பதற்கு இதைவிட வேறு வழியில்லை' என்றோ பதில் வழங்கப்பட்டாலும் ஆச்சரியம் இல்லை.

ஏனென்றால் " ஆளணி நியமிப்பது இருக்கட்டும். அப்படி நியமிப்பதற்கு முதற்படியாக ஆளணிகளுக்கான அனுமதி (Carder approval) அவசியம். அதனைப் பெற்றுக்கொண்டிருக்கிறீர்களா?" என்று எவரும் கேள்வி எழுப்பமாட்டார்கள் என்று சுகாதாரத்துறையினருக்கு நம்பிக்கையாகத் தெரியும். இது தொடர்பில் முன்னாள் திறைசேரி உதவிச் செயலாளர் ஒருவர் சொன்னார் "கிளிநொச்சி மருத்துவமனையின் குழந்தைகள் மற்றும் மகப்பேற்றுப் பெண் நோயியல் பிரிவுகளை இந்தப் புதிய மையத்துக்கு மாற்றுவதென்பது, இந்த நகர்வு வெளிநாட்டுக் கடன் மூலமாகப் பெறப்பட்ட பொது நிதியினால் அமைக்கப்பட்ட ஒரு திட்டத்தின் மூல நோக்கத்தினையே (Scope) புரட்டிப் போடும். அத்துடன், அந்த நிதியினைத் தவறாகக் கையாண்டதாக (misappropriation of public fund) அமையும் என்பதோடு, எதிர்காலத்தில் வெளிநாட்டு நிதி உதவிகளை வடமாகாணம் பெறும் முயற்சிகளுக்கும் பெரும் தடையாக மாறும்".

அதுமட்டுமல்ல "செயற்றிட்டம் முடிவுபெற்றும் அதனை இயக்க முடியாதிருப்பதும் மூல நோக்கத்தை புறந்தள்ளி, மையத்தை வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்துவதும், வெளிநாட்டுக் கடனாகப் பெற்ற பொது நிதியினைத் தவறாகப் பயன்படுத்தி மோசடி (corruption) செய்ததாகவே கருதப்படவேண்டும்" என ஓய்வு பெற்ற பிரதிக் கணக்காய்வாளர் நாயகம் ஒருவர் கூறினார்.

வல்லுநர் குழுவின் ஆலோசனைகள் மற்றம் மாகாண மத்திய சுகாதார அமைச்சுகளால் இற்றைப்படுத்தப்பட்ட தீர்மானங்கள் புறக்கணிக்கப்பட்டதோடு சகல எச்சரிக்கைகளையும் மீறி குறித்த மையத்தின் அமைவிடத்தினை வெளியார் அழுத்தம் காரணமாக மாவட்ட சுகாதாரத்துறையினர் மாற்றியமையே தற்போதைய சகல நடைமுறைச் சிக்கல்களுக்கும் (Functional disadvantages) காரணமாகி உள்ளது.

முன்பு குறிப்பிட்டவாறு, 17.02.2018 அன்று வெளியார் மற்றும் அரசியலாளர்களது அழுத்தம் மற்றும் ஆலோசனைகளுக்கு அமைய "வட மாகாணத்துக்கான விசேட மகளிர் சிகிச்சை மையத்தினை கிளிநொச்சி மருத்துவமனை வளாகத்தினுள் முன்னர் தீர்மானிக்கப்பட்ட இடத்தில் கட்ட அனுமதிப்பதில்லை" என கிளிநொச்சி மாவட்ட சுகாதாரத்துறையினர் முடிவெடுத்து, அதனை நெதர்லாந்துக்கு அறிவித்த பின்னர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு நெதர்லாந்திலிருந்து 21.02.2018 அன்று பின்வருமாறு பதில் வந்திருந்தது

'கிளிநொச்சியின் ஆகப்பிந்திய நிலமைகள் குறித்து எமக்குத் தகவல் தந்தமைக்கு நன்றி

கிளிநொச்சி (வட மாகாணத்துக்கான விசேட மகளிர் சிகிச்சை மையம்) திட்ட அமைவிடமானது பலதடவைகள் மீளாய்வு செய்யப்பட்டதுடன் முறையான இடக்கையிருப்பு மேற்கொள்ளப்பட்டுவிட்டது. அவசர சிகிச்சைப் பிரிவுடன்கூடிய வட மாகாணத்துக்கான விசேட மகளிர் சிகிச்சை மையத்தின் அமைவிடத்தினை மாற்றுவது சாத்தியமான ஒன்றுதான். எனினும் இதனால் ஏற்படக்கூடிய மேலதிக செலவீனங்களான (பிரதான கட்டடத்துடன் இணைப்பது) முதலானவை ஒருபுறம் இருக்க, இவ்வாறு இடம் மாற்றுவது சில நடைமுறைச் சிக்கல்களுக்கு இட்டுச்செல்லலாம். தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ள இடமானது வெளிநோயாளர் பிரிவுக்கு மிகவும் அண்மையானது என்பதால் அது ஓர் அனுகூலமாகும். இந்தச் செயற்றிட்டமானது CT scan மற்றும் பரிசோதனை அறையினைக் குறித்த கட்டடத்தொகுதியினுள் உள்ளடக்கியுள்ளதுடன், இந்த வசதிகள் முழு மருத்துவமனையினால் பயன்படுத்தப்படலாம்.

(06 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
14 செப்ரெம்பர் 2025

# உளர்ந்தினம்

இராகவன்

பாகம் 3

மன்னவனும் பேராசிரியர் சிவத்தம்பியும் நெருங்கிய நண்பர்கள். அதாவது "டா" போட்டுக் கதைக்குமளவுக்கு நெருங்கிய நண்பர்கள். பேராசிரியர் சிவத்தம்பி கரவெட்டி மேற்கு சண்டில் குளத்தடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கார்த்திகேசுப் பண்டிதரின் மூத்தமகன். அவரும் மன்னவனும் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் முதலாம் வகுப்பிலிருந்து ஒன்றாகப் படித்தவர்கள். கரவெட்டி தச்சந்தோப்பு சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலில் ஏழாந்திருவிழா சிவத்தம்பியின் சமூகத்தினருக்குரியது. அந்தத் திருவிழா மற்றைய நாள் திருவிழாக்களைவிட எழுப்பமாக இருக்குமெண்டு எங்கடையம்மா சொல்லக் கேட்டிருக்கிறன். எங்கடையூரில சிகரங்கட்டி நடக்கிற திருவிழாவும் அதுதான். சிகரங்கட்டிறதுக் கெண்டே அவையளுக்கை கார்த்திகேசு எண்டொராளிருந்தவர். அவருக்குப் பட்டப் பெயரே சிகரம் கார்த்திகேசு எண்டால் பாருங்கோவன். அப்பவே இரண்டு லைற் எஞ்சின் பிடிச்சுப் பல்ப் பூட்டிறதெண்டால் எப்பிடியிருக்கும்? சொல்லிவேலையில்லை. ம்... இப்ப நாங்கள் விசயத்துக்கு வருவம்.

ஒருக்கால் தச்சந்தோப்புப் பிள்ளையார் கோவில்ல ஏழாந் திருவிழாவண்டு இரவு எங்கடை மன்னவனும் போயிருக்கிறார். அப்ப அங்கை சிவத்தம்பியும் நிண்டிருக்கிறார். இரண்டு கரையும் கலர் கல்ரா பல்ப் பூட்டி ஒரே ஜெகஜோதியாய் ஜொலிச்சுக்கொண்டிருக்குது. நடுவில் மன்னவனும் சிவத்தம்பியும் நிக்கினம். அப்ப சிவத்தம்பி வாயைச் சும்மா வைச்சிருக்காமல் மன்னவனைப் பார்த்து, "எப்பிடியடா மன்னவன் லைற் அலங்காரம்? எந்தக் கரை நல்லாயிருக்கு?" எண்டு கேட்டிருக்கிறார். அவர் அப்பிடிக் கேட்டாப் போல மன்னவன் இரண்டு கரையையும் ஒருக்கால் மாறிமாறிப் பாத்திட்டு, "இந்தக் கரையானைவிட அந்தக் கரையான் நல்லாயிருக்கடாப்பா!" எண்டு சிவத்தம்பி நிண்ட பக்கத்தைக் காட்டியிருக்கிறார். சிவத்தம்பி அதை எதிர்பார்க்கேல்ல. தன்னை மறந்து சிரிச்சிட்டார்.

45

இதுதான் மன்னவனின்ர முத்திரை. இதிலை எனக்கும் நேரடியாய் ஒரு சின்ன அனுபவமிருக்குது. எங்கடையூரில நாகராசன் எண்டொராள் கம்மாலை வச்சிருந்தவர். நான் சின்னப் பொடியனாயிருக்கேக்குள்ள ஊருக்குள்ள தங்கமயில், இரத்தினம், அப்பர், ஜெயம், நுலன், லாவுணன் எண்டு கனபேர் கம்மாலை வைச்சிருந்தவை. பிறகு உந்தச் சண்டை கலாதியெல்லாந் தொடங்கினாப் போல பலரும் வெளிநாட்டுக்குப் போகிட்டினம். சிலர் தொழிலை விட்டுட்டினம். ஆனால் நாகராசன் மட்டும் கடைசிவரை தொழிலை விடேல்ல. கத்தி, கோடரி, மண்வெட்டி தோய்விக்கிறதெண்டால் என்ன ஒரு பாதாளக்கரண்டி செய்யிறதெண்டாலென்ன உலக்கைக்குப் பூண் போடுறதெண்டால் என்ன எல்லாத்துக்கும் எங்கடை ஊராக்கள் நாகராசனின்ர கம்மாலைக்குத்தான் போவினம்.

அதால விராலில்லாக் குளத்துக்குக் குறவை அதிகாரி எண்டமாதிரி நாகராசன் ஒரு தனிக்காட்டு ராசாவாய் வந்திட்டார். அவரிட்ட ஒரு வேலைக்குப் போனால் நிண்டு செய்விச்சுக் கொண்டு வரவேணும். இல்லாட்டில் குடுத்த சாமானைத் திருப்பியெடுக்கிறது கல்லில நாருரிக்கிறமாதிரித்தான். இண்டைக்கு வா! நாளைக்கு வா! எண்டு நாளைக் கடத்திக் கொண்டிருப்பாரே தவிர வேலை முடியாது.

(தொடரும்)

# வட மாகாணத்துக்கான....

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

CT யானது பிரதான கட்டடத்திற்கு அருகில் இருப்பதே நோயாளர்களுக்கு வசதியானதாகும். ஆயினும், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் இடத்தினை மாற்றுவது குறித்த கலந்துரையாடலை ஆரம்பிப்பதற்கு நான் விரும்பவில்லை. இது விரும்பத்தகாத விளைவுகளுக்கான கதவுகளைத் திறக்கக்கூடும் என்பதுடன் இந்தத் திட்டத்துக்கு ஆபத்தான தாமதங்களை ஏற்படுத்தவும்கூடும்.

(நெதர்லாந்தின்) நிதி உதவிக்குப் பிரதான காரணிகள் வடமாகாணத்துக்கான விசேட மகளிர் சிகிச்சை மையம் மற்றும் மருத்துவப் புனர்வாழ்வு மையம் (மாங்குளம்) ஆகிய இரண்டுமேயாகும். எனவே இவை இரண்டும் பாதுகாக்கப்பட வேண்டும்" என்று அந்தப் பதில் கடிதம் எழுதப்பட்டிருந்தது.

அதாவது 2025 இல் வட மாகாணத்துக்கான விசேட மகளிர் சிகிச்சை மையத்தினை இயக்குவதற்கு என்ன நடைமுறைச் சிக்கல்கள் தடையாக உள்ளதாக தற்போதுள்ள நிர்வாகம் கூறுகிறதோ, அவற்றினை அப்போதே குறிப்பிட்டு, — "ஏலவே பலசுற்று ஆலோசனைகள் மற்றும் ஆய்வுகளின் பின்னர் தீர்மானிக்கப்பட்ட வட மாகாணத்துக்கான விசேட மகளிர் சிகிச்சை மையத்துக்கான அமைவிடத்தினை தற்போது கட்டப்பட்டுள்ள இடத்துக்கு மாற்றினால் இவ்வாறான நடைமுறைச் சிக்கல்கள் வரலாம்" — என நெதர்லாந்துப் பிரதிநிதி 21.02.2018 அன்றே மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு முன்னெச்சரிக்கை செய்துள்ளார். அத்துடன் 'வட மாகாணத்துக்கான விசேட மகளிர் சிகிச்சை மையத்தினை நிர்மாணிப்பதில் இடர்பாடுகள் வந்தால் நெதர்லாந்தின் உதவித்திட்டம் நிறுத்தப்படும் ஆபத்து உள்ளது' என்பதனை வரிகளுக்கிடையே குறிப்பாலுணர்த்தியுமுள்ளார். வெளிப்படையாகச் சொல்வதானால் நெதர்லாந்து அவ்வளவு இறுக்கமாக இல்லாதிருந்திருந்தால் வடமாகாணத்துக்கான விசேட மகளிர் சிகிச்சை மையமே இங்கு அமைக்கப்பட்டிருக்கமாட்டாது. அது அவ்வாறிருக்க, 2017ஆம் ஆண்டில் பாதீட்டின் ஊடாக கிளிநொச்சி மருத்துவமனைக்கு 2500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப் பரிந்துரை வழங்கப்பட்டும் அது தொடர்பில் இதுநாள்வரை எந்தத் தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதனால் கிளிநொச்சி மருத்துவமனையின் இரண்டாம் கட்ட அபிவிருத்தியின் அடுத்தடுத்த பணிகள் ஆரம்பிக்கப்படாமலே எட்டு வருடங்கள் — அல்லது இரண்டு நடாளுமன்றப் பதவிக் காலங்கள் கடந்து போய்விட்டன. அதன் பிற்பாடு வெளிநாட்டு நிதியுதவியாளர்களுடன் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட ஆளணிகளை இந்த விசேட மகளிர் சிகிச்சை மையத்திற்குப் பெற்றுக் கொடுக்க சம்பந்தப்பட்டவர்கள் தவறியுள்ளனர். இவையனைத்துக்கும் காரணமான சிலர் இவையெல்லாவற்றிற்கும் 'மத்தியின்' மீது குற்றம் சுமத்திவிட்டு இருக்க, வேறு சிலர் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவில் வட மாகாணத்துக்கான விசேட மகளிர் சிகிச்சை மைய ஆளணியினை நிரப்பும் பிரேரணையினை முன்வைத்துத் தொட்டிலை ஆட்டுகிறார்கள்.

இந்த நிலையில், "கடனாகப் பெறப்பட்ட பொதுநிதியில் வாங்கப்பட்டுள்ள பல மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளபாடங்களைப் பயன்பாடில்லாமல் (ideling of accests) பழுதடையவிடுவது நிதிவிதிகளின் (Financial Regulations) படி குற்றமாகும். இந்தக் குற்றத்துக்காக பொறுப்பான அரச அதிகாரிகள் நாடாளுமன்றக்குழு விசாரணைக்கு அழைக்கப்படலாம். இதனால் இவற்றினைப் பிற மருத்துவமனைகளுக்கு மாற்றுவதனை எவரும் குற்றம் சொல்லவோ அல்லது தடுக்கவோ முடியாது. கிளிநொச்சி மருத்துவமனையிலிருந்து முன்னரும் மருத்துவ உபகரணங்கள் பலதடவைகள் நாட்டின் பிற மருத்துவமனைகளுக்குத் தற்காலிகமாக வழங்கப்பட்ட மற்றும் நாட்டின் வேறு மருத்துவமனைகளிலிருந்து தற்காலிகமாக மருத்துவ உபகரணங்கள் பெறப்பட்ட வரலாறு இதற்கு உதாரணம்" என்று மாகாண சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஒருவர் தெரிவித்தார்.

எனவே, இவற்றையெல்லாம் தொகுத்துப் பார்க்கும்போது, வடக்கு மாகாண ஆளுநர், அரசசார்பு மக்கள் பிரதிநிதிகள் மற்றும் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் தற்போது செய்யவேண்டியவையாவன:

- வட மாகாணத்துக்கான விசேட மகளிர் சிகிச்சை மையத்தை அதன் மூல நோக்கத்துக்கு (Scope) ஏற்ப பயன்படுத்த அரசாங்கமும் அதிகாரிகளும் உடனடி நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான நகர்வுகளைத் தாமதமின்றி மேற்கொள்ளவேண்டும்.
- இந்தத் திட்டம் தடம்புரண்டதற்குப் பொறுப்பான அனைவர்மீதும் இலஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, திணைக்கள மட்ட மற்றும் நாடாளுமன்ற பொது நிதிக்குழு (Committee on Public Accounts) ஆகியன விசாரணைகளை நடத்தி, உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். குறிப்பாக
- 2018 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் தீர்மானிக்கப்பட்ட இடஅமைவினை மாற்றுவதனால் வரக்கூடிய நடைமுறைச் சிக்கல்கள் குறித்து நிதிவழங்குநர்கள் வெளிப்படையாக எச்சரித்திருந்தும் அதனைக் கருத்திலெடுக்காது மருத்துவமனைத் திட்டமிடல் குறித்த எந்த அனுபவமோ அல்லது அறிவோ அற்ற அரசியல்வாதிகளினதும் வெளியாரினதும் அழுத்தத்துக்குப் பணிந்து, திட்டத்தை மாற்றிய சகல அரச அதிகாரிகள் மீதும் விசாரணைகள் நடத்தப்படவேண்டும்.
- 2017 ஆம் ஆண்டில் பாதீட்டின் ஊடாக கிளிநொச்சி மருத்துவமனை க்கு 2500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப் பரிந்துரை வழங்கப்பட்டும், இன்றுவரை அதனை பெற்றுக்கொள்ள முயற்சிகள் எடுக்காதவர்கள்மீது விளக்கம் கோருவதோடு, பெறுவதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.
- ஏறத்தாழ மூன்று வருடங்களுக்கு முன்னரே இது குறித்துப் பகிரங்கமாக எச்சரித்தபோதும் விழிப்படையாது, ஏற்கனவே ஒப்புக்கொண்ட ஆளணிகளைத் தகுந்த நியாயப்பாடுகளுடன் கோரிப் பெறாமல்விட்ட சகல அதிகாரிகளிடமும் விளக்க கோருவதோடு நடவடிக்கையும் எடுக்கவேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(சென்றவாரத் தொடர்ச்சி)

# அந்தோன் சேகவின் மூன்று ஆண்டுகள்

நா.நவராஜ்



## மனம் பொருந்தா மணமக்களின் மனப்போராட்டம்

பணம் என்ற ஒன்றையே மையப்படுத்துமாக இருந்தால் உடல்கள் மட்டும் இயங்குகின்றன. அன்பு, காதல் என்பது புதைந்துபோகின்றது. முன்னர் சொன்னது போல பிள்ளைகளுக்காக, சமூகத்திற்காக என்று தம்மைப் பேணிக்கொள்கின்றன. இதனால் அகம் புறம் என்று பிரிக்கப்பட்ட நமது வாழ்க்கையும் அறம்புறமாகத் திரிந்து விடுகின்றது.

லாப்தேவ் மாஸ்கோவில் இருக்கும் வணிகர் ஒருவரின் வாரிசுகளில் இரண்டாவது மகன். இவனுக்கு ஒரு தமக்கையும் ஒரு தம்பியும் இருக்கின்றனர். தனது மூத்த சகோதரி நீனா வசிக்கும் மாகாண நகரத்தில் வந்திருக்கும்போது மார்பகப் புற்றுநோயால் அவதியுறும் தனது சகோதரி நீனாவிற்கு மருத்துவம் பார்க்கவரும் மருத்துவர் செர்கேய் பரீச்விசின் மகள் யூலியாவைக் காதலிக்கிறான். ஒரு தலையாகவே காதல் நிகழ்கின்றது. பின்னர் அனுமதி கேட்டு அவளை மணம் முடிக்கின்றான். மாஸ்கோவிலிற்குச் சென்று வாழ்கின்றான் அங்கு வாழ்கின்றபோது அவர்கள் வாழ்க்கைத் திருமணத்தில் இருந்து அன்பு , காதல் என்ற உணர்வினை அனுபவிக்காமல் அதனை ஏக்கத்தோடு எதிர்பார்க்கும் மனநிலையில் வைத்துக்கொண்டே பாலுறவு என்ற நிலையைச் சென்றடைகின்றது. அன்பு, காதல் என்பது பெறப்பட முடியாதா ஒன்றாகவே அவர்கள் இருவருக்கும் இருக்கின்றது. இதனால் அவர்களுக்கு இடையில் பலபிரச்சினைகள் சிக்கல்கள் ஏற்படுகின்றன. அவர்களுக்கு இடையில் நிகழும் இந்த உணர்வுசார்ந்த உறவுசார்ந்த சிக்கல்களை யும் பிரச்சினைகளையும் சேகவ் தெளிவாக எடுத்துச்சொல்லும் விதமானது எமது மனங்களுக்குள்ளும் அதன் ஒளியினைப் பாய்ச்சி அதன் இருண்ட பகுதிகளையும் பார்க்க வைக்கும் வல்லமை கொண்டதாக விளங்குகின்றது.

லாப்தேவிற்கும் யூலியாவிற்கும் இடையில் ஏன் இவ்வாறு நடக்கின்றது என்று ஆராய்கின்றபோது நாவலின் ஊடாக அவர்களது தனிமனித ஆளுமையின் கட்டமைப்பில் செல்வாக்குச் செலுத்திய உளவியற்கூறுகளைப் புரிந்துகொள்ள முடிகின்றது. எங்கோபிறந்த இருவர் இணைந்து குடும்பத்தை உருவாக்குகின்றனர். காதலிலும், பொருத்தம் பார்க்கும் திருமணத்திலும் இந்நிலைதான். எனினும் காதலில் அவர்களுக்குள் சற்றுப் பழக்கமிருக்கும். மற்றையதில் முழுமையாகப் பழக்கமற்ற மனிதர்கள்தான். அவ்வளவுதான் வித்தியாசம். ஆனாலும் காதலில் வரும் பழக்கம் வேறு, திருமணமாகி ஒரே வீட்டில் ஒன்றாக இணைந்து வாழும்போது ஏற்படும் சூழ்நிலைவேறு. அந்தவகையில் பார்த்தால் இருமனங்களும் பழக்கமற்ற சூழலையும் நபரையுமே கொண்டிருக்கும் எனலாம். (இதையும் தாண்டிப் புனிதமான காதல்களை இங்கு நான் குறிப்பிடவில்லை) காதலிப்பவர் குறட்டை விட்டுத்தூங்குவார் என்பது பக்கத்தில் படுக்கும் போது தானே தெரியவரும். காதலிக்கும்போது அது தெரிவதில்லை. (குறட்டையால் பிரிந்த குடும்பங்களும் இருக்கின்றன). எனவே தனிமனிதர்கள் என்ற வகையில் லாப்தேவின் ஆளுமை உருவாக்கப்பட்டவாறும் யூலியாவின் ஆளுமை உருவாக்கப்பட்டவாறும் வேறுவேறானவை. ஒருவரின் ஆளுமையைப் பரம்பரைக்காரணிகளும் சூழல்காரணிகளும் சேர்ந்து உருவாக்குகின்றன என்பர். இந்த இருவரையும் பார்க்கின்றபோது அவர்களின் பரம்பரையியல்புகளும் வாழ்ந்த சூழலும் அசாதாரணமானதாகவே காணப்படுகின்றன. அது ஒருவருக்கு உளவியல் சார்ந்த தாக்கத்தை அளிக்கக்கூடியது.

இதனைத் திருமணமாகி மாஸ்கோவிற்கு வந்து தனது தந்தையாரைச் சந்தித்த பின்னர், தான் அஞ்சியதற்கு மாறாக எல்லாம் நல்லபடியாக நடந்ததைக் கண்டு மகிழ்வெய்தி, யூலியாவிற்குத் தனது வளர்ப்புப் பற்றி லாப்தேவ் கூறும் 'இத்தகையை பலமும் திடகாத்திரமும் உடைய ஒருவர் (தந்தையார்) பியோதரையும் (தம்பியையும்) என்னையும் போன்ற மெலிந்த பிள்ளைகளைப் பெற்றிருப்பது ஏனோ என்று நீ அதிசயப்படலாம். ஆயினும் அதற்குக் காரணமில்லாமலில்லை. என் தாயை மணக்கும் போது அவருக்கு நாற்பத்தைந்து; அவளுக்குப் பதினேழு வயதுதான். அவரைக் கண்டு பயந்து நடுங்கினாள் என் தாய். நீனா முதலிற் பிறந்தாள்: அப்பொழுது என் தாய் ஓரளவு ஆரோக்கியத்துடன் இருந்தாள். அதனால்தான், நீனா எப்போதும் எங்களைவிட அதிக பலமும், உடல்நலமும் பெற்றிருந்தாள். தினமும் பயந்து நடுங்கி உருக்குலைந்த நிலையில்தான், அம்மா பியோதரையும் என்னையும் பெற்றெடுத்தாள். எனக்குச் சரியாக ஐந்து வயதுகூட ஆகாதபொழுது தந்தையார் முதன் முதல் எனக்குக் கல்வி புகட்ட, சரியாகச் சொன்னால் அடிக்கத் தொடங்கியது எனக்கு நினைவிருக்கிறது. அவர் என்னைக் கசையால் அடிப்பார். காதைப் பிடித்துத் திருகுவார், தலையில் குட்டுவார்; காலையிலெழுந்ததும், அன்று என்னை அவர் அடிப்பாரா, மாட்டாரா என்ற எண்ணந்தான் முதலில் வரும்...... அதிகாலையில் நடக்கும் வழிபாட்டிற்குப் போய், பாதிரியார்கள், துறவியர்களின் கைகளில் முத்தமிடவேண்டும். வீட்டிலோ துதிப்பாசுரங்களைப் படிக்க வேண்டும். உனக்குத் தெய்வபக்தி அதிகம். நீ அவற்றையெல்லாம் விரும்புகின்றாய். ஆனால் எனக்கோ மதம் என்றால் பயம்தான். ஏதாவது ஒரு மாதாகோயில் அருகில் செல்ல நேர்ந்தால், உடனே குழந்தைப்பருவம் நினைவுக்கு வரும், உடம்பெல்லாம் நடுக்கமெடுக்கும். எட்டுவயதில் பண்டகசாலையில் எடுபிடிவேலை செய்யத்தொடங்கினேன். அது எனது உடல்நலத்திற்குக் கேடு விளைவித்தது. ஏனெனில் அங்கு நான் அடிவாங்காத நாளே அநேகமாக இருக்காது. பிறகு நான் பாடசாலைக்குச்சென்றபோது பகலுணவுவரை பாடம் நடக்கும் முடிந்ததும் பண்டசாலையில் நாள்முழுவதும்கழிப்பேன். இப்படியே இருபத்திரண்டு வயது ஆகுமட்டும் நடந்துவந்தது. அப்போது நான் பல்கலைக்கழகம் சென்றேன். அங்கு யார்த்ஸெவுடன் சிநேகம் கொண்டேன். அவன் என்னை வீட்டை விட்டு வந்துவிடுமாறு யோசனை சொன்னான்....' என்ற கூற்றின் அடிப்படையில் அறிந்துகொள்ளலாம்.

இந்த வளர்ப்பு முறையால் வீட்டை விட்டே ஓடும் லாப்தேவ் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றாலும் தாழ்வுச் சிக்கலுக்கும் தேவையற்ற பயத்திற்கும் எதிரான கற்பனைக்கும் இருப்பிடமானவனாக உருவாகிவிடுகின்றான். குறிப்பாகத் தனது உருவம் சார்ந்து அழகில்லாதவன், குள்ளமானவன், மெல்லிய உடலமைப்புடையவன், சிவந்த கண்கள் உடையவன், உச்சந்தலையில் மயிர் உதிரத்தொடங்கிவிட்டவன் என்ற நினைப்பைக் கொண்டிருக்கும் அவன் ஆரம்பங்களில் 'காதல் என்பது ஒரு மனநோய்; பார்க்கப்போனால் இரு பாலினருக்கிடையே ஏற்படும் உடற்கவர்ச்சியைத்தவிர ஒன்றுமில்லை' என்று காதலுக்கு எதிரான கருத்துக்களையே கொண்டவனாக இருந்தான். அப்படியிருந்த போதிலும் ஒரு மாஸ்கோ நடிகை மீது ஒரு தலையாகக் காதல் கொண்டிருந்தான். அதன் பின்னர் பொலீனா என்ற பெண்ணுடன் ஒன்றரை ஆண்டுகளாக வாழ்ந்தும் (LivingTogether) அவனால் அவ்வுணர்வினை அனுபவிக்க முடியவில்லை. இவைநடந்து ஆறு ஆண்டுகளின் பின்னரே சகோதரி வீட்டுக்கு வந்திருந்த நிலையில் தனது முப்பத்து நான்காவது வயதில் யூலியாவைக் காதலிக்கின்றான். லாப்தேவின் இந்தக்காதலுடன் தான் நாவல் தொடங்குகின்றது. யூலியாவைச் சந்திப்பதற்காக அவன் எடுக்கும் முயற்சிகள்: மருத்துவர் வந்து தனது தமக்கையைப் பரிசோதித்துச் சென்ற பின்னர். அவரைத் தேடி (அவர் மகளைப் பார்ப்பதற்காக) சென்று மருத்துவர் வரும் போது தனது வீட்டில் வைத்துக் கேட்ட கேள்விகளையே அங்கும் கேட்பது. மருத்துவம் பற்றிப் பேசுவது என அது சுவாரஸ்யமாக நகர்கின்றது.

ஒருதடவை அவனது சகோதரியின் வருத்தத்தைப் பார்ப்பதற்காக வந்த யூலியா தனது குடையை அங்கு தவறுதலாக விட்டுச் செல்லுகின்றாள். அவளைச் சந்திப்பதற்கு வாய்ப்புத் தேடும் லாப்தேவிற்கு இது ஒரு வாய்ப்பாக அமைகின்றது. மகிழ்ச்சியில் துள்ளிக்குதிக்கும் லாப்தேவ் மாஸ்கோவில் இருக்கும் நண்பர்களுக்கு இரவில் தனது காதல் பற்றிக்கடிதம் ஒன்றை எழுதுகின்றான் அப்பொழுது யூலியாவின் குடையை விரித்துப் பிடித்தபடி அதன் கீழ் இருந்தே அதனை அவன் எழுதுவதாக 'சேகவ்' குறிப்பிடும் இடம் அற்புதம். தனது மூன்று ஆண்டு வாழ்க்கையின் பிற்பகுதியில் மனைவியுடன் பேசும் ஒரு சந்தர்ப்பத்தில் லாப்தேவ் 'இன்பம் என்பதே இல்லை; ஒருக்காலும் நான் அதை அறிந்ததே இல்லை. அது இருக்கிறதா என்பதையே நான் சந்தேகிக்கின்றேன். என் வாழ்க்கையில் ஒரே ஒரு தடவைதான் நான் இன்பமாயிருந்தேன்: உன் குடையின்கீழ் அமர்ந்திருந்த அன்றிரவுதான்...' என்று குடைக்குள் இருந்த இந்தச் சந்தர்ப்பத்தை நினைவு கூர்கின்றான். எனினும் காதல், இன்பம் என்ற இந்த உணர்வினை அவனால் ஆழமாக அனுபவிக்கமுடியாமல் போனதற்கு அவனது மனநிலை: எதையும் தாழ்வாகப் பார்ப்பது, ஒரு விடயத்தைத் திரும்பத்திரும்ப எண்ணிப்பார்த்து அவர்கள் என்ன நினைப்பார்கள் ஏன் அப்படிக் கதைத்தேன், செய்தேன் என்று கேள்விக்கு உள்ளாக்கித் தன்னையே தாழ்த்தி நினைக்கும் இயல்பு போன்றன முக்கியமான காரணங்களாக இருந்தன.

(அடுத்தவாரம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**போ.ஷெர்லி**
தரம் -7B
யா/இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம்




**மு.பூர்ணிகா**
தரம் 3
யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

**சி.சரன்ஜினி**
தரம்- 9B
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை




**வி.டிஷானுஜா**
தரம் - 9A
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



**ப.பவனுசன்**
தரம்- 5A
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை






**கெ.அஜிஷா**
தரம் - 6
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



**மாணவர்களே!**

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

---

(பேராசான் கலாநிதி க.சிவராமலிங்கம்பிள்ளையின் (முன்னாள் பிரதி அதிபர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) நூற்றாண்டு நினைவு தினம் 16.09.2025 செவ்வாய்க்கிழமையாகும். அதனையொட்டி இந்தக் கவிதை பிரசுரமாகின்றது)

# மங்கிடாப் புகழாளன்!



எங்களின் குருவாயும், 'இது திசை'
என்றுரைத்த 'கலங்கரை' யாகவும்,
சங்கைமிக்க 'யாழ். இந்து' ஆசான்களில்
தனித்தொளிர்ந்த பிதாமக னாகவும்,
சிங்கமாகக் கால் பழுதுபட் டாலும்... உளச்
சீற்றம் குறையாது "வாழ்ந்து... மறைந்த" நம்
'மங்கிடாப் புகழாளன்' 'சிவராம
லிங்கம்' மாஸ்ரரை.. நெஞ்சால் வணங்குவோம்!

கற்ற கல்வியால் பெற்ற கம்பீரமும்,
கலை மொழி தேர்ந்து கொண்ட மிடுக்கதும்,
மற்ற வர்க ளுக்காகத் தன் இயலாமை
மறைத்து... உதவிடும் ஈகைக்குணம் பண்பும்,
உற்ற துன்பம் பொறுத்து... ஊர் உலகிற்
குழைத்தும் தன்நலம் எண்ணாத் தியாகமும்,
நற்றமிழ் சைவம் பேசி அறம் சொல்லுஞ்
ஞானமும், கொள் 'சிவராமர்க்கு' ஈடுயார்?
'மூன்று சக்கரச் சைக்கிளாம் தேரிலே'

மூலை முடுக்குகள் யாவும் நிதம் சென்று,
ஆன்றோர் தொட்டு அசடர் வரை நட்பை
ஆண்டு, யார் யார்க்கோ கரம் தந்து,
சான்றோ னாகவும், 'நாட்டாமை' போலவும்,
தமிழடியார்க்குப் 'பிரம்ம ரிஷி'யாயும்
தோன்றி மறைந்தின்று இருபது ஆண்டுகள்
தொலைந்ததா? 'ஐயன்' நினைவுகள் நீறுமா?

'ஆசான் மாணவர்' உறவுக் குதாரணம்
ஆனவர் 'லிங்கர்' ஆற்றுப்படுத்தியும்,
பேசவைத்தும், பிரபலம் ஆக்கியும்,
பின்னிற்க...மாணாக்கரோ முன்வைத்து
தேசம் தேசமாய்க் காவித் திரிந்தனர்!
சேவை செய்தனர் கடைசி வரை அவர்
பாசம் கண்டவர் இன்று நூற்றாண்டு
அவ்வை நாளில் பணிந்தஞ்சலிக்கிறோம்!

த.ஜெயசீலன்
11.09.2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org